நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI පුදියපූමි

சுற்று 05 ஏப்ரல் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்றி 18


## புத்தர் துறந்த சுகபோகம்

மல்வத்த பீடாதிபதி அதி வணக்கத்துக்குரிய ரம்புக்கெல்ல சிறி விபசி தேரருக்கும், அஸ்கிரிய பீடாதிபதி அதி வணக்கத்துக்குரிய பலிப்பானே சந்திரானந்த தேரருக்கும் புத்தம் புதிய இரண்டு ஆடம்பர பென்ஸ் கார்களை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அன்பளிப்புச் செய்துள்ளார். அவை ஒவ்வொன்றின் பெறுமதி முப்பத்தி நான்கு லட்சங்களாகும். அன்று அரசு குமாரரான கௌதம புத்தர் தனது சகல வகையான ஆடம்பர சுகபோகங்களையும் துறந்து காவி உடை தரித்து அரசு மர நிழலுக்கு வந்தவர் என்பதைப் படித்திருக்கின்றோம்.

# ஐக்கிய தேசியக் கட்சி யாருக்காக அழுகிறது?



**ஐக்கிய தேசியக் கட்சி சில பிரச்சினைகளைக் கையில் தூக்கி மக்களுக்காக குரல் வைப்பது போல் நடித்து வருகிறது. அந்த நாடகத்தில் தமிழ் மக்கள் தலைநகரில் கைதாவதைத் கண்டித்தும் மலையக மக்களது உரிமைகளுக்கு நிற்பது போலவும் வேடம் இட்டுக் காட்டுகிறது. ஆனால் அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கோ, மலையக மக்களது உரிமைகளுக்கோ விரோதமான நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறது.**

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்த யோசனைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு அர்த்தமற்ற தாக்கப்பட்டதற்கு ஐ. தே. கட்சி முக்கிய காரணியாகும். உத்தேசத் தீர்வுத் திட்டம் நாட்டை பிரிக்க வழிசெய்யும் என்று கூறி தீவிரவாத பேரினவாதிகளுக்கு பக்கபலமாக இருந்து வருகிறது. தற்போது ஐ.தே. கட்சி முன்வைத்துள்ள மாற்று 'தீர்வுத் திட்டம்' என்றழைக்கப்படும் திட்டம் நடைமுறையில் இருக்கும். மாகாண சபை முறையைவிட குறைவான தாகும் என்பதும் வெளிப்படையானதாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கடந்த சில தினங்களாக ஐ. தே. கட்சித் தலைவர்கள் சிலர் கூறிவருகின்றனர்.

அரசின் தீர்வுத்திட்டம் வெட்டி குறைக்கப்பட்டதற்கு பிரதான காரணமாக ஐ. தே. கட்சி இருந்து விட்டு வெட்டிக் குறைக்கப்பட்ட நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியாது என்பதை தெரிந்து கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று ஐ. தே. கட்சி கோரி வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு ஐ. தே. கட்சி தூண்டுதலாக இருந்து விட்டு இப்போது ஒன்றுமே அறியாதது போல் பேசுகிறது.

அரசாங்கத்தின் வெட்டிக் குறைக்கப்பட்ட தீர்வு திட்டத்திற்கு தீவிர பேரினவாதிகளுடன் சேர்ந்து கொண்டு குறுக்கே நிற்கும் ஐ. தே. கட்சி தனி நாட்டிற்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தும் யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்பதை நேர்மையுடன் ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாக கூறிக்கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவுமே தமிழ் மக்களுக்கு விரோதமானவையாக இருக்கின்றன. யுத்தத்தை முன்னெடுத்து செல்வது தொடக்கம் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற ரீதியில் தமிழ் மக்கள் மீது நடாத்தப்படும் மோசமான கெடுபிடிகள் வரை எல்லாமே தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே இருக்கின்றன.

ஆனால் அவை பற்றி ஐ. தே. கட்சி வடிப்பது முதலையின் கண்ணீரேயாகும். ஐ. தே. கட்சி அதனுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்க்க உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வில்லை. ஜனாதிபதி விஜேதுங்கவின் ஆட்சிக் காலத்தில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக இருந்த வேளையிலேயே தமிழர்கள் பொலிஸில் பதிவு செய்யும் நடைமுறைகளும், தமிழர்களுக்கு எதிரான சோதனை கெடுபிடிகளும் தொடக்கி வைக்கப்பட்டன. அன்று கவலைப்படாத அன்றைய பிரதமரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பொலிஸாரின் சோதனைகளால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுவதாகவும் இன்று மிகவும் உருக்கமாக கவலைப்படுகிறார். ஆடு நனைகிறது என ஓநாய் அழுததாம்.

அன்று தொண்டமானுடன் சேர்ந்து தோட்டத் தொழிலாளர் களுக்கு அவர்கள் வாழும் லயன் அறைகளை சொந்தமாக்கிக் கொடுக்கும் உறுதிகளை வழங்குவதாக கபட நாடகம் ஆடிவிட்டு இன்று மலையக மக்களிடம் ஐ. தே. கட்சியை பலப்படுத்தும் முயற்சிகளை செய்துவருகிறவரும் இதே ரணில் விக்கிரமசிங்கதான். இ. தொ. கா. உட்பட எல்லா தொழிற் சங்கங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சரிவு ஏற் பட்டுள்ள நிலையில் மலையகத்தில் ஐ. தே. கட்சி அதனது செல்வாக்கை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. உள்ளூராட்சி சபை தேர்தலில் மலையகத்தில் கிடைத்த வெற்றியை சாதகமாக பயன்படுத்தி அதன் நிலையை

—— தொடர்ச்சி 11 பக்கம்

## அமெரிக்க ஆதிக்கம் நாட்டை விழுங்குகிறது!

ஒரு காலத்தில் அமெரிக்கா பற்றிக் கூறினால் இலங்கை மக்களின் கண்களில் கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்து நிற்கும். அந்தள விற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதான வெறுப்பும் எதிர்ப்பும் இருந்து வந்தது. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிகளின் போது எடுக்கப்படும் அமெரிக்க அரவணைப்பு நடவடிக்கை களை மக்கள் எதிர்த்து வந்தனர். அதனாலேயே அமெரிக்கப் பாதம் தாங்கியான ஜே. ஆரை. 'யங்கி டிக்கி' என அரசியல் அரங்கில் அழைத்தனர்.

அந்த யங்கி டிக்கியான ஜே. ஆர், தனது இறுதி ஆட்சிக் காலத்தில் வாழ்நாளின் அபிலாஷையாகக் கொண்டிருந்தவாறு நாட்டை அமெரிக்காவின் காலடியில் ஒப்படைக்கும் பொருளாதார அரசியல் சமூக கலாச்சாரச் சூழலை உருவாக்கி உறுதிப் படுத்தி விட்டுச் நிம்மதியாக கண்களை மூடிக்கொண்டார். ஜே. ஆர். ஆரம்பித்த இன யுத்தம் இலங்கைக்குள் அமெரிக்கா இலகுவாகவே புகுந்து கொள்ள வழி சமைத்துக் கொடுத்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையும் சந்தைப் பொருளாதார முறைமையின் வேகமும் நாட்டை முற்று முழுதான நவ கொலனித்துவ மாக்கிக் கொண்டது. நாட்டின் பொருளாதாரத்திற்கு உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஆணையிடும் மையங்களாகின. தனியார் மயம் வேகமாகி பல்தேசியக் கம்பனிகளும் அன்னிய மூலதனமும் நாட்டிற்குள் தமது ஆதிக்கத்தை அதிக எதிர்ப்பின்றி புகுத்திக் கொண்டன.

பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து கொண்டதுடன் நாட்டை அமெரிக்காவிற்கு தாரை வார்த்து வந்த நடைமுறையில் ஏதாவது மாற்றம் வர வாய்ப்பு உண்டு என மக்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பை தலைகீழாகப் புரட்டி விட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தைப் போன்றே தாராள

—— தொடர்ச்சி 11 பக்கம்

## மலையகஇளைஞர்கள் கைதால் பெற்றோர்கள் கவலை

புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் மலையகத்தில் இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்படுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தலதா மாளிகை குண்டு வெடிப்பை அடுத்தே மேற்படி புலி வேட்டை மலையகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நிரபராதிகள் என்று விடுதலை செய்யப் பட்டவர்களும் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். சில இளைஞர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை என்று சில மலையக பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பற்றி மலையகத்தின் பெருந் தலைவர்கள் எனப்படுபவர்கள் எவருமே அக்கறைப் படுவதாக இல்லை. சில பெருந்தலைவர்களின் மறைமுகத் தூண்டுதலாலேயே சில இளைஞர்கள் கைது செய்யப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கந்தப்பொலயில் கைது செய்யப்பட்ட ஒரு இளைஞன் திருமணம் முடித்து ஒரு கிழமை கூட ஆகாத நிலையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.

தனிப்பட்டவர்களின் பெட்டிசன்கள், சில தொழிற்சங்கத் தலைவர்களின் தகவல்கள் என்பனவே இளைஞர்கள் கைது செய்யப்படுவதற்கு ஆதாரமாக கொள்ளப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் 300 பேரை கைது செய்ய உதவ வேண்டும் என்று பொலிசார் கேட்டுள்ளதாக அறிய முடிகிறது.

கைது செய்யப்பட்ட மலையக இளைஞர்களின் எண்ணிக்கை அவர்கள் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் இடங்கள் பற்றிய தகவல்களை சரியான முறையில் பெற முடியாதிருக்கிறது.

இவ்வாறான ைகதுகள் கெடுபிடிகள் காரணமாக மலையகத்தில் பொது இடங்களில் இளைஞர்கள் நடமாட்டம் குறைவாகவே இருக்கிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுவிக்க தனித்தனியாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அவற்றினால் உடனடியான பயனேதும் இல்லை.


ஆதாரமற்ற நிலையில் இளைஞர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கவும் கைது செய்யப்பட்டவர்களை விரைவில் விசாரித்து விரைவாக விடுதலை செய்ய அல்லது அவர்கள் மீது வழக்குத் தொடுக்கவும் பொதுவான கூட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களின் உடல், உயிர், பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட நடவடிக்

—— தொடர்ச்சி 4 பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்





# பாடசாலைக் காணிப்பிரச்சினையில் தலைமைகள் யார்பக்கம்?

பெருந்தோட்டப்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இரண்டு ஏக்கர் காணி வழங்கப்பட வேண்டும் வழங்கப்பட்ட காணி பாடசாலை கட்டிடம் அமைக்கவும் மைதானம் அமைக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

மாறாக பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியானது மரக்கறி பயிர்செய்கைக்கு பயன்படுத்தும் விந்தையான செயற்பாடுகள் இடம்பெறுவது வழமையாகிவிட்ட நிலையில் ஹைபொரஸ்ட் தமிழ் வித்தியாலயத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி முழுவதும் தனியொருவருக்கு தாரை வார்த்த செய்கையானது மிகவும் விசனத்துக்குரியதே.

இக்காணியானது 1978ம் ஆண்டு காலப்பகுதியில் ஹைபொரஸ்ட் தமிழ் வித்தியாலயத்துக்கென ஒதுக்கப்பட்டதாகும் அக்காலப்பகுதியில் ஹைபொரஸ் தமிழ் வித்தியாலயம் (இல3)க்கு புதிய கட்டிடம் அமைக்க வேண்டிய தேவை இன்மையால் காணியை பாடசாலைக்கு பயன்படுத்துவதில் பெற்றோரும் பாடசாலை நிர்வாகமும் கூடிய அக்கறை செலுத்தவில்லை. எனவே காணியானது அனாதரவான நிலையிலேயே காணப்பட்டது.

1984ம் ஆண்டு காலப்பகுதியில் வலப்பனை பிரதேச பாராளுமன்ற உறுப்பினரின் (ஐ.தே.க.) உறவினர்கள் பலாத்காரமாக காணியினுள் புகுந்து தமதாக்கி கொண்டனர். அக்காணியை தற்போது பணம் கொடுத்து வாங்கி மரக்கறி செய்கை பண்ணுகின்றார். இவர் ஆரம்பத்தில் இ.தொ.கா. செல்வாக்கு பொருந்திய பெரும் புள்ளியாவார். இடைக்காலப் பகுதியில் அரசாங்க மாற்றம் ஏற்பட்ட பின்பு தன்னை தற்காத்துக் கொள்ள மலையக மக்கள் முன்னணிக்கு தாவினார், இதனால் விசனமடைந்த இ.தொ.கா. தலைமை எப்படியும் காணியை பெற்று பாடசாலை கட்டியே ஆகவேண்டும் என்று என்னம் கொண்டு செயற்பட தொடங்கியது.

இக்காலப்பகுதியிலேயே புதிய பாடசாலைக் கட்டத்துக்கான தேவையும் ஏற்பட்டது. பாடசாலை மாணவர்களது தொகையும் அதிகரித்து பாடசாலை மண்டபத்துள் கல்வி கற்க முடியாத நிலையில் திறந்த வெளியிலும் மாணவர் பாடம் கற்றனர். எனவே பாடசாலைக்கான காணியை பெறவேண்டியதும் புதிய கட்டிடம் அமைக்க வேண்டியதும் அவசியமானதே.

பெற்றோர் ஆசிரிய சங்கத்தினதும் தோட்ட பொது மக்களதும் அயராத முயற்சியால் காணியின் ஒரு பகுதியில் கட்டிடம் அமைக்க ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு I.R.D.P. நிறுவனத்தால் வழங்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டிடத்துக்கு அடிக்கல் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சதாசிவம் அவர்களால் நாட்டப்பட்டது.

இதனை ஒரு சந்தர்பமாக பயன்படுத்திய காணி உரிமையாளர் இ.தொ.காவுக்கு மாறினார். இவர் இ.தொ.கா. தலைவர் தலைமைகள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்றமையாலும் தற்போது தடம்மாறிய செயற்பாடுகள் நிகழ்த்தொடங்கியுள்ளன. அதே காணியில் தான் கட்டம் அமைக்க வேண்டுமா, என்றும் கம்பனியிடம் பேசி வேறுகாணி பெற்று தருவதாகவும் ஏமாற்றும் நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இடையில் கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டதனை தொடர்ந்து மேற் கொள்ளுமாறு காணி உரிமையாளரே கூறினாலும் I.R.D.P.யினர் வேலைகளை தொடங்க தயாராக இல்லை என்றும் தெரியவருகின்றது. அதனை அடிப்படையாக வைத்து பார்க்கின்ற போது மாறி மாறி குத்துக்கரணம் இ.தொ.கா. அடிப்பதனால் நிலை தடுமாறி செய்வதறியாது தவிப்பவர்கள் பெற்றோர் ஆசிரிய சங்கமும் பாடசாலை சின்னஞ்சிறார்களும்தான்

உண்மையான இதய சுத்தியுடன் இப்பிரச்சினையை நோக்கி மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டவர்களாக எவர் இருப்பினும் இப்பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக காணியை பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

மேற்படி பாடசாலைக் காணி விடயத்தில் இ.தொ.கா, ம.ம.மு. ஆகியன தனிநபர்களது பக்கமா? அல்லது கல்விக்காக ஏங்கிநிற்கும் தோட்டத்தொழிலாளர்-மாணவர்கள் பக்கமா?

-தீரன்

# "தொழிலாளர்கள் குடிகாரர்கள்" தொண்டமான் பேசும் தூசனம்!

105 ரூபாவை பெற முடியவில்லை என்று தோட்டத்தொழிலாளர்கள் யோசித்துக்கொண்டிருக்கும் போது அவர்களுக்கு 1000ரூபாவை வாங்கிக் கொடுத்தாலும் முன்னேற மாட்டார்கள். எல்லாவற்றையும் குடித்தே அழித்து விடுவார்கள் என்று இ.தொ.கா தலைவரும் அமைச்சருமான தொண்டமான் கூறியுள்ளார்.

தோட்டத்தொழிலாளர்கள் குடிப்பதனால் தான் அவர்களுக்கு 105ரூபா சம்பளம் கிடைக்கவில்லை என்று கூறி தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்தியுள்ளதுடன் "அந்த குடிகார தோட்டத்தொழிலாளர்களின்" சந்தப்பணத்திலும் வாக்குகளிலும் தானும் தன்னுடைய சேர்வாரங்களும் வாழ்கின்றன என்பதை மறந்து விட்டார்.

மது குடிப்பதனை அளவுகோலாகக் கொண்டால் இலங்கையில் ஒருவருக்கும் சம்பள உயர்வு கிடைக்ககூடாது. எம். பி. யான, அமைச்சரான தொண்டமானுக்கும் கூட. இலங்கையில் 90 சதவீதமானவர்கள் மது குடிப்பவர்கள் என்றும் 60 சதவீதமானவர்கள் தினமும் குடிப்பவர்கள் என்பதை தொண்டமான் அறியமாட்டார். மது தோட்டத் தொழிலாளர்களை சீரழிக்கிறது என்பது உண்மை. ஆனால் அந்த மதுவை வழங்க இ.தொ.கா எம்பிக்களின் கோட்டாக்களினால் மலையகத்தில் திறக்கப்பட்ட சாராய தவறணைகள் எத்தனை என்று தொண்டானுக்கு தெரியாது. மலையக எம்பிக்களின் கோட்டாவினால் மலையகத்தின் சந்துபொந்துகள் எல்லாம் சாராயத்வறணைகள் திறக்கப்பட்டுள்ளன. சட்டப்படி இரண்டு சாராயத்தவறணைகளுக்கு இடையில் இருக்கவேண்டி தூரம் பற்றியோ, கோயில்களுக்கு அருகிலோ சாராயத்தவறணைகளை நடத்தக் கூடாது என்ற கட்டுப்பாட்டினையோ கணக்கில் எடுக்காது சாராயத்தவறணைகளை மலையக எம்பிக்களே திறந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் "டிப்பர் லொறிகளில்" சாராயத்தை வைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு வார்த்துக் கொடுத்தவர்கள் இ.தொ.கா. தலைவர்களே என்பதை தொண்டமான் அறியமாட்டரா?

வழமையான தன்னுடைய காட்டிக் கொடுப்புகளையும், இன்றைய தனியார் கம்பனிகளுக்கு எதிராக வாலாட்ட முடியாத பலவீனமான தன்னுடைய தொழிற்சங்க அமைப்பையும், தலைமையும் தன்னிடம் வைத்தக கொண்டு மூர்க்கமாகவும், பட்டினிகிடந்தும் போராடிய தொழிலாளர்களைப் பார்த்து குடிகாரர்கள் என்றும் கோரிய சம்பள உயர்வை பெறமுடியாத நிலையில் சம்பள உயர்வு கிடைத்தாலும் குடித்தே அழித்துவிடுவார்கள் என்றும் கூறுவது தகுமா?

கோரிய சம்பளத்தை பெற முடியாததற்கு தொழிலாளர்கள் குடிப்பதே காரணம் என்ற தொண்டமானின் கண்டுபிடிப்பிற்கு சப்பைக்கட்டி அதை ஆமோதிப்பதாக பத்திரிகையில் 'பழையபண்டிதர்' கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். குடிப்பதனால்தான் தொழிலாளர்கள் தோல்வியடைந்து விட்டனர் என்று அவர் எழுதியுள்ளார் குடிக்கும் பழக்கமுள்ள தொழிலாளர்கள் போராட முடியாதவர்கள் என்ற அவரது கண்டுபிடிப்பையும் வெளியிட்டுள்ளார். தோட்டத் தொழிலாளர்கள் என்றால் அவ்வளவு ஏளனமா? அவர்களைப் பற்றி யார் வேண்டுமென்றாலும் என்னவும் சொல்லலாம் என்ற எண்ணமா?

நடந்து முடிந்த போராட்டத்தின் மூலம் தோட்டத்தொழிலாளர்கள் பலமானவர்கள் என்று நிரூபித்துள்ளனர். ஆனால் தொழிற்சங்கங்களும், அரசாங்கமும் தனியார் கம்பனிகளுக்கு முன்னால் பலவீனமானதாகவே இருப்பதாக நிருபித்துள்ளன.

# நாலும் நடக்கும் உலகிலே!

## 50ம் துக்க தினம்

இலங்கையின் 50ம் சுதந்திர நினைவு நாளை ஒரு துக்க தினமாக அனுட்டிக்குமாறு பல தமிழ்ஈழ விடுதலை இயக்கங்களும் கேட்டக்கொண்ட்டுள்ன. இந்த நாளில் இலங்கையின மக்கள் கொண்டாட அதிகம் இல்லைத்தான். வென்ற பலவற்றை இழந்து அவற்றை மீளச் பெறுவதற்குப் போராட வேண்டிய நிலை இலங்கையின் மக்களிற் பெரும்பாலோரானாருக்கு ஏற்பட்டுள்ளது. 1977க்குப் பின்பு ஏற்பட்ட சரிவை நம்மால் இன்னும் நிமிர்த்த முடியவில்லை. என்றையும் விட அதிகமாக இன்று நாடு அந்நிய முதலாளித்துவத்திற்கு கடன் பட்டு இருக்கிறது. தேசிய இனப் பிரச்சனை தீர்க்கப்படாமல் சமுதாயம் சீர்குலவை நோக்குகிறது. கொண்டாட அதிகமில்லை என்பது உண்மைதான். ஆயினும் இது நமக்கு 50வது துக்கதினம் என்றால் அதற்கு முன்பு இருந்த காலம் நமக்கு மகிழ்வூட்டும் ஒன்றாக இருந்ததா?

நிச்சயமாக ஒன்று சொல்லலாம். சிங்கள, தமிழ், முஸ்லிம் முதலாளிகளைப் பொறுத்தவரை அவர்கட்கு துக்கம் தரும்படி அதிகமாக அன்றும் எதுவும் இருக்கவில்லை. இன்னும் எதுவுமில்லை. சுதந்திரம், தரகு முதலாளிகளைப் பொறுத்தவரை, துக்கம் தந்தது. அயினும் இப்போது இந்தக் கவலை போய் விட்டது. 1956க்கு பிறகு, தமிழரசுகட்சி துக்கம் கொண்டாடியது. 1965–69 காலகட்டத்தில் துக்கத்தை மறந்திருந்தவர்களுக்கு பிறகு 1970ல் துக்கம் மீண்டுவிட்டது. 1977ல் சிறிது போய் விரைவில் மறுபடியும் மீண்டுவிட்டது.ஒரு சிலர்போக எல்லோருக்கும் இந்தச் சுதந்திரம் பற்றி ஏதோ துக்கம் இருக்கிறது. ஆனால் என்ன துக்கம் என்பது தான் பிரச்சனை.

## தடைசெய்து தீருமோ தலைவலி?

விடுதலைப்புலிகளுக்கு தடைவிதித்ததன் மூலம் அரசாங்கம் சாதிக்க நினைப்பது என்ன? குண்டு வெடிப்புசம்பவம் ஏற்படுத்திய அவமானத்தை மழுப்புவதற்காகவும் பேரினவாதிகளைத் திருப்த்திப்படுத்துவதற்ககாவும் மட்டுமே எடுக்கப்பட்ட நடவடிக்கையா? இத்தடை வடக்கு கிழக்குப் போரை முடிவுக்கு கொண்டுவர உதவுமா? விடுதலைப்புலிகளைப் போரில் முற்றக அழித்தொழிக்க முடியும் என்று நம்புகிற அரசாங்கம் அவர்களைத் தடைசெய்ய அவசியம் என்ன? நியாயமான அரசியல் தீர்வுபோக இப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேறு வழி இல்லை என்பதை அரசாங்கம் அறியும். ஆயினும் போரை மேலும் தீவிரப்படுத்திப் பேச்சுவார்த்தைகட்கான வாய்ப்புக்ளை இல்லாதொழிக்கும் இந்த நடவடிக்கையின் நோக்கமென்ன? அமெரிக்காவில் புலிகட்குத் தடை, இந்தியாவில் ஜெயின் அறிக்கையும் ராஜீவ் கொலைக்கான மரணதண்டனைகளும் போன்றவற்றின் பின்னணியில் நோக்கும் போது தடைக்கான காரணம் தலதாமாளிகை சம்பவம் அல்ல என்பது தெரியும். எப்போதோ போடப்பட்ட ஒரு திட்டத்திற்கு இச் சம்பவம் ஒரு வசதியான தருணம் மட்டுமே என்றுதான் தோன்றுகிறது.

## விரோதமான சினேகிதர்கள்

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுள் மகாராட்டிச் சாதிவெறியர்களதும் மத வெறியர்களதும் கட்சியான சிவசேனையின் தலைவர் தக்கரே ஒருவர், பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டத்தில் புகுந்துள்ள ஜோர்ஜ் பெர்னான்டஸ், கோபாலசாமி, ராமதாஸ் எல்லாருமே விடுதலைப்புலிகளது அனுதாபிகள். எந்த விதமான இன ஒடுக்கலுக்கு எதிராகத் தமிழர்கள் போராட வேண்டியுள்ளதோ அந்த விதமான இன ஒடுக்கலின் சக்தியான பா.ஜ.கட்சிக் கூட்டத்தில் தமிழ் மக்கள் சார்பில் போராடும் இயக்கத்தின் ஆதரவாளர்கள் இருப்பதை நினைத்துச் சிரிப்பதா அழுவதா?

## கருத்துக் கணிப்பா, கருத்துத் திரிப்பா?

கருத்துக்கணிப்புக்கள் ஜனநாயகத்தின் ஒரு முக்கிய கருவியாகச் சிலரால் காட்டப்பட்டுவருகின்றது. ஆயினும் இவை மூலம் மக்கள் கருத்துப் பற்றி திரிப்பைச் செய்ய முடியும் என்பது ஆய்வுகள் மூலம் ஏற்கனவே காட்டப்பட்டுள்ள ஒன்று. கேள்விகளை முன்வைக்கும் முறை (விடைகளை ஆம் இல்லை என்ற விதமாகப் பெறும் போது) கருத்தை கணிசமான அளவு விகாரப்படுத்தலாம். ஆயினும் பெரும் பத்திரிகைகளும் வானொலிகளும் தொலைக்காட்சியும் பெருமுதலாளிகளது கையில் உள்ளவரை, கருத்துக்கணிப்புக்கள் அந்த வர்க்க நலன்களைப் பேணுவதில் வியப்பில்லை.

1995 இந்திய தேர்தலின் போதுஇந்தியா டுடேயின் கருத்துக்கணிப்பு பாரதிய ஜனதா கட்சியின் வலிமையை மிகைப்படுத்திகாட்டியது. இந்தமுறை, தேர்தலுக்கு சில வாரங்கள் முன்பிருந்து பத்திரிகைக் கருத்தக் கணிப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன இது போதுமானதா?

இலங்கையின் 1977 தேர்தலுக்கு முன்பு யூ.என்.பி சார்பு ஏடுகள் சில அடுத்த தேர்தலில் யார் வெல்லக்கூடும் என்ற கேள்வியைச்கேட்டதை ஏகப் பெரும்பாலானோர் யூ.என்.பி என்றே கூறினர். இது யூ.என்.பிக்கு 90% ஆதரவு என்ற விதமாகத் திரிக்கபட்டு, ஊசலாடும் நிலையிலிருந்த வாக்களர்களை யூ.என்.பிக்குச் சாதகமாக வாக்களிக்கும் படி செய்யப் பயன்பட்டது. இவ் விதமான விஷமம் சில இந்திய கருத்துக்கணிப்புக்களிலும் காணப்படுகிறது.மக்கள் கருத்துத் தெரிவிக்க வேண்டிய வேறெத்தனையோ பிரச்சனைகள் உள்ளன. அவை பற்றி ஆட்சியாளர்களோ பெரிய பத்திரிகைகளோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தமது நோங்கங்கட்கு வசதியாகப் பயன்படுகிறவிதமாகவே கருத்துக்கணிப்புக்குரிய விடயங்கள் தெரியப் படுகின்றன.

## அமெரிக்கச் செய்தியாளர்கள்

அமெரிக்காவின் ஜனநாயகம் அமெரிக்க மக்களது அரசியல் அறிவு எவ்வளவு மந்தமாக இருக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. எனவே அமெரிக்கப் பத்திரிகைகள் அந்த ஜனநாயகத்தைக் காக்கத் தம்மாலானதைச் செய்கிறார்கள்.

அண்மையில் பிரித்தானிய பிரதமர் தோனி ப்ளேரும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும் சந்தித்ததையடுத்து நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் கேட்கப்பட்ட 16 கேள்விகளில் 10 கிளின்டனின் காமக் கேளிக்கைகள் பற்றிய குற்றச்சாட்டுத் தொடர்பானவை. ஈராக் மீது தொடுக்கப்படவுள்ள விமானத் தாக்குதல் பற்றிய நியாயங்கள் விளக்கங்கள் எதுவுமே அமெரிக்க மக்களுக்கு அவசியமில்லை. பிரித்தானிய, இஸ்ரேலிய ஆட்சிகள் கண்ணைமூடிக் கொண்டுஆதரிப்பார்கள். அமெரிக்காவுக்குப் பிரேதப் பைகளில் அமெரிக்கப் பிணங்கள் வராத வரை பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் போர் என்றால் திருவிழாதான்.

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI புதியபூமி

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## பேரினவாத ஒடுக்கு முறையும் தேசிய இனங்களின் நிலையும்

இன்று பேரினவாதம் ச்ன்னதம் கொண்டு தலைவிரித்து ஆடிநிற்கிறது. அதற்கு தினம்தினம் உருக்கொடுப்பதில் பௌத்த பீடாதிபதிகள், மதவெறியர்கள், பேரினவாத அறிவுஜீவிகள், அதிகாரப் பசிகொண்ட அரசியல் வாதிகள் என்போர் முன்னிற்கின்றனர். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேசியம் என்னும் வடிவிலே தோற்றம் பெற்ற இனவாதக் கருத்துக்கள் நூற்றாண்டு முடிவுறப்போகும் இன்றைய நிலையில் பேரினவாதமாகி ராணுவ ஒடுக்கு முறை கொண்டதாக வளர்ச்சி பெற்று நிற்கிறது. கடந்த இரண்டு தசாப்தகாலத்தின் யுத்த அழிவுகளின் பட்டறிவுகளுக்கு பின்பும் பேரினவாதம் படியிறங்கியதாக இல்லை. உதராணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்கட்டமுடியும். அண்மையில் மிக விலை உயர்ந்த ஆடம்பர பென்ஸ் கார் ஒன்றை ஜனாதிபதியிடமிருந்து அன்பளிப்பாக பெற்றுக்கொண்ட மல்வத்தை மகாநாயகக்க தேரர் கருத்துக்கூறுகையில் ஒரு பென்ஸ்கார் அல்ல பத்து பென்ஸ்கார்கள் தந்தாலும் தனது நிலையில் இருந்து மாறப்போவதில்லை எனக் கூறி உள்ளர். அவரது நிலை என்பது அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தை எதிர்த்து நிற்பது என்பதாகும். இத்தகைய பேரினவாதச் சிந்தனைகளுக்கு அடிபணிந்தே இன்று அரசியல் தீர்வு என்பது முழுமையற்று பலவீனமானதொன்றாக பின்னுக்குத் தள்ளப்பட்டு யுத்தம் உக்கிரமாக நடாத்தப்பட்டு வருகிறது.


இந்த நிலையிலே இலங்கையின் தேசிய இனங்களது யதார்த்த நிலையை வரையறை செய்து அதன் அடிப்படையில் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்திற்கு எதிராக முன் செல்ல வேண்டியுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தேசிய இனங்கள் நான்கும் பறங்கியர் மலேயர், வேடர் போன்ற சிறுபான்மைச் சமூகங்களும் உண்டு. சிங்கள தேசிய இனம் எண்ணிக்கையில் 75 சத வீதத்தைக் கொண்டிருப்பதானது பேரினவாதச் சிந்தனையின் ஒரு முக்கிய அம்சமாகும். ஏனைய தேசிய இனங்களான தமிழர், முஸ்லீம்கள், மலையமக்கள் ஆகியவை மத்தியில் உள்ள மிகப் பெரும் பலவீனம் ஒற்றுமையீனமும் ஒன்றை மற்றொன்று ஏற்றுக் கொள்ள மறுப்பதுமாகும். பெரும் தேசிய இனத்தின் மத்தியில் இருந்து வழிநடத்தப்படும் பேரினவாத ஒடுக்கு முறையை அதன் சாராம்சத்தில் அடையளாம் கண்டு எதிர்த்து நிற்பதற்கு ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் ஒன்றுபடமுடியாது இருப்பதுதான் அப்பலவீனமாகும். ஒடுக்கப்படும் ஒவ்வொரு தேசிய இனமும் தம்முள் ஒவ்வொருவரதும் தேசிய இனத் தனித்துவத்தையும் தன்னடையாளங்களையும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். நிலவுடமைச் காலச் சிந்தனை அளவுகோல் கொண்டு பேரினவாத ஒடுக்க முறைக்கு முகம் கொடுப்பதை நிராகரித்து சமகால வரலாற்று வளர்ச்சி தோற்று வித்த தேசிய இனங்களின் யதார்த்த நிலைமைகளைக் கொண்டு எவ்வாறு ஒடுக்குமுறையை எதிர்கொள்வது எனச் சிந்தித்து செயல்படவெண்டும். பெரும் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள பேரினவாத சக்திகளையும் சாதாரண மக்களையும் வகைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதேபோன்று ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் தேசிய இனங்களின் தனித்துவ வளர்ச்சியை அங்கீகரிக்க வேண்டும். இதன் அடிப்படையில் பரந்த ஐக்கியம் தோற்றுவிக்கப்பட்டு பொது எதிரியை அடையளாம் கண்டு நட்பு சக்திகளுடன் இணைந்து போராட்டங்கள் தனி ஒரு தளத்தில் மட்டுமன்றி பல்வேறு தளங்களில் முன்னெடுக்கப்படல் வேண்டும். தேசிய இனப்பிரச்சினை என்பது பிரதான முரண்பாடு என்ற இடத்தை அடைந்து நிற்கும் இன்றைய நிலையில் பேரினனவாத ஒடுக்குமுறையை எதிர்த்து முறியடித்து தேசிய இனங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு உரிய வெகுஜன மார்க்கம் திறக்கப்படல் வேண்டும். இது மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இனப் பிரச்சினைகளை ஒடுக்கு முறையாக்கியவர்கள் உள் நாட்டு ஆளும் வர்க்கங்களும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுமாவர். இதன் அடிப்படையான வர்க்கவேர்கள் அறியப்படவேண்டும்.. ஏகாதிபத்தியவாதிகள், பிராந்திய மேலாதிக்க சக்திகள், பேரினவாத ஒடுக்குமுறையாளர்கள் ஆகியோரே நமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை யுத்த வடிவம் பெறக்காரணம் ஆகினர். எனவே தேசிய இன விடுதலையை நேர்மையாக நாடி நிற்கும் எவரும் இம் மூன்று சக்திகளையும் அடையாளம் கண்டு அவற்றுக்கான உண்மையான மக்கள் போராட்டங்களைக் கட்டி எழுப்பி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய இனங்களின் இன்றைய உரிமைகளை நிலைநாட்ட முன் நிற்கவேண்டும். இது வரலாற்றுத் தேவையும் அவசியமுமாகும்

ஆசிரியர் குழு

## தொழிற்சங்கங்களுக்கு தோல்வி தொழிலாளர் சக்திக்கு வெற்றி

கேட்டது ரூபா 105, கிடைத்தது ரூபா 101 அதுவே போதும் என்பதே இ.தொ.கா. உட்பட எல்லா தொழிற் சங்கங்களினதும் நிலைப்பாடாகும். 101 கிடைத்ததால் வேலை நிறுத்தம் வெற்றியையே நிலைநாட்டியுள்ளது என்பது தொழிற்சங்கங்களின் கருத்தாகும்

ஆனால் வேலை நிறுத்தம் வெற்றியை நிலைநாட்டவும் இல்லை. இ.தொ.கா. வெற்றியடையவும் இல்லை. ஏனைய தொழிற்சங்கங்கள் வெற்றியடையவும் இல்லை. தோட்டக்கம்பனிகளே வெற்றியடைந்துள்ளன. கேட்ட 105 ரூபாவை கொடுக்க இணங்காமல் 101 ரூபாவிற்கு இணங்கி அதிலும் 95 ரூபா சம்பளமென்றும் 6 ரூபா போனஸ் என்றும் கூறி றப்பர் தோட்டத்தொழிலாளர்களுக்கு 95 ரூபாவை மட்டும் வழங்க இணங்கி தொழிற்சங்கங்களினதும் அரசாங்க த்தினதும் காதுகளில் பூ வைத்து விட்டன



தோட்டக்கம்பெனிகள். எதிர்வரும் 18 மாதங்களுக்கு சம்பள உயர்வு பற்றி பேசக்கூடாது என்று தொழிற்சங்களின் வாய்களுக்கு பூட்டு போட்டுவிட்டன. அரசாங்கமோ தொழிற்சங்கங்களோ தம்மை அசைக்க முடியாது என்பதை கம்பெனிகள் நிலைநாட்டிவிட்டன. ஆனால் தொழிலாளர்களின் உறுதியான போராட்டத்தினாலே 101 ரூபாவை யாவது வழங்க முன்வந்தன.

இப்போராட்டத்தில் தோட்டத்தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு நேரடியாகப் பங்கெடுத்து பலவிதமான போராட்ட வடிவங்களை முன்னெடுத்து தனியார் கம்பெனிகளுக்கு எதிரான பரந்த பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். தொழிற்சங்கங் களின் வழிகாட்டலோ தலைமையோ இன்றி தொழிலாளர்கள் தாங்களாகவே உண்ணவிரதம், சத்தியாக்கிரகம் போன்றவற்றை நடத்தியுள்ளனர். வேலை நிறுத்தப்போராட்டம் தேவையில்லை இதனை தொழிலாளர்களால் நடத்தமுடியாது என்றெல்லாம் கருத்துக்கள் முன்வைக்கப்படும் இந்த காலகட்டத்தில் அதனை உறுதியாக நடத்தியுள்ளனர். தனியார் கம்பெனி களுக்கு எதிரான வரலாற்றில் முக்கிய இடத்தை எடுக்கின்ற போராட்டமாக இவ்வேலைநிறுத்தப் போராட்டம் அமைந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை தேசிய தோட்டதொழிலாளர் சங்கம் (யூ.என்.பி) தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பன வேலை நிறுத்தம் சுமுகமாக முடித்துவைக்கப்பட்டதாக அறிவித்தள்ளன. கோரிக்கை விடுக்கப்பட்ட 105 ரூபா சம்பளத்திற்கு பதிலாக 101ரூபாவை தேயிலை தோட்டத்தொழிலாளர்களுக்கும் 95ரூபா றப்பர் தோட்டத்தோழிலாளர்களுக்கும் வழங்குவதற்கு தோட்டக்கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின்னரே மேற்படி இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இ.தொ.கா. இ.தே.தோ. சங்கம் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பன 101 ரூபா சம்பளத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் ம.ம.முன்னணியும் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் என்பன 101 ரூபாவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறிவித்துள்ளன.



வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்குமுன்னர் தொழில்அமைச்சர் ஜொ செனவிரட்ன வுடனான பேச்சுவர்த்தை களில் இ.தொ.கா. இ.தே.தொ.சங்கம் ம.ம.முன்னணி இ.தே.தொ.காங்கிரஸ் உட்பட எல்லா தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன. அப்பேச்சுவார்த்தைகளில் 100ரூபா 58சதத்தை ஒரு நாள் சம்பளமாக கொடுத்தால் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று எல்லா தொழிற்சங்கங்களும் இணங்கியிருந்தன. இதற்கு தோட்டத்தொழிலாளர்கள் இணங்கவில்லை. தோட்டக்கம்பெனிகள் 100 ரூபா 58 சதத்தை கொடுக்க மறுத்தபடியாலேயே 105ரூபா கோரிக்கையை முன்வைத்த தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்ய தயாராகினர். இ.தொ.கா. வின் நியாயம் என்னவெனில் தொழிலமைச்சருடனான பேச்சுவார்த்தையில் இணங்கியதைவிட 42 சதத்தை அதிகமாகவே பெற்றுக்கொடுத்துள்ளோம். ஆகவே இது வெற்றிகரமான போராட்டமே ஆகும். இனியும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யக்கூடிய அளவிற்கு தொழிலாளர்களிடம் ஒன்றுமே இல்லை எனவே வேலைநிறுத்தத்தை கைவிடும் அளவிற்கு தொழிலாளர்களுக்கு கஸ்டம் கூடுவதற்கு முன்னர் நாம் 101ரூபாவை பெற்றுக்கொடுத்தமை வெற்றியே என்பதாகும்.

ஆனால் ஆறுமுகம் தொண்டமான், சதாசிவம் ஆகிய இ.தொ.கா. வின் முக்கிய தலைவர்கள் 105ரூபாவிற்கு குறைவான சம்பளத்தை ஏற்க மாட்டோம் என்று இறுதி பேச்சுவார்த்தை நடைபெற்ற நாளில் கூட தெரிவித்துள்ளனர்.

எனினும் 101 ரூபாவை ஏற்றுக்கொண்டு இ.தொ.கா.வும் ஏனைய தொழிற்சங்கங்களும் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தை காட்டிக்கொடுத்து விட்டனர். அன்று தோட்ட தனியார் மயத்தை வரவேற்ற தொண்டமானால் தொழிலா ளர்களின் போராட்ட சம்பளத்தை பெறமுடிய வில்லை இது வழமை யான காட்டிக்கொடுப்பல்ல. தொழிலா ளர்கள் மிகவும் பலமாக போராடிய போதும் அப்போராட்டத்தை முன்னெடுக்க கூடிய பலத்தை சங்கங்கள் கொண்டிருக்கவில்லை தனியார் கம்பெனிகளை எதிர்த்து உறுதியாக போராட்டத்துக்கு வழிகாட்டவோ, தலைமை கொடுக்கவோ தொழிற் சங்கங்கள் பலமாக இல்லை. தொழிலாளர்களின் எழுச்சியை வளர்த்துச்செல்ல தொழிற்சங்களுக்கு திராணி இல்லை. இவ்வாறன பலவீனமான நிலையிலே 101 ரூபாவை இ.தொ.கா. முதல் எல்லாரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ம.ம.மு இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ்சும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுகின்றன. அவையும் தொழிலாளர்களின் எழுச்சியை வளர்த்து முன்னெடுக்கும் விருப்பதினின்று அப்படி கூறவில்லை.

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளில் மேற்படி இரண்டு சங்கங்களும் அவை எதிர்பார்த்த முக்கிய இடம் இருக்கவில்லை. அதனாலும் ஏனைய அரசியல் எதிர்பார்ப்புகளினாலும் அவைகள் இ.தொ.காவை விமர்சிக்கின்றன.

இவ்விடயத்தில் குறுகிய அரசியல் நோக்கத்துடன் ஒரு தொழிற்சங்கம் இன்னொன்றை குற்றம் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஏனெனில் தொழிலாளர்களுடான பேச்சுக்களில் கலந்து கொன்டவை என்ற அடிப் படையில் போராட்டத்தை கூட்டாக நடத்தியவை என்ற அடிப்படையிலும் 105 ரூபாவை வென்றெடுக்க முடியாமல் போனமைக்கான பொறுப்பை எல்லா தொழிற்சங்கங்களும் ஏற்க வேண்டும்.



1996 ஆம் ஆண்டு வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறும்போது சந்திரசேகரனும் ஜனாதிபதி விஜயதுங்காவின் காலத்தில் சம்பள உயர்வு கேட்டபோது செல்லச்சாமியும் எப்படி நடந்து கொண்டனர் என்பதை விரிவாக கூறத்தேவை இல்லை.

நடைபெற்ற போராட்டத்திலிருந்து சாதகமானவற்றையும், பாதகமானவற்றையும் தொகுத்து தனியார்மயத்துக்கும், தணியார் கம்பெனிகளின் கொடுமைகளுக்குப் எதிராக நாடெங்கும் நடைபெறும் போராட்டங்களுடன் தோட்டத்தொழிலாளர்களின் போராட்டம் இணைக்கப்பட வேண்டும் என்பதும் அப்போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய புதிய உறுதியான தொழிற்சங்க அரசியல் தலைமைத்துவத்தை கட்டிவளர்க்க வேண்டும் என்பதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற செய்திகளாகின்றன.


### புதிய பூமி சந்தா விபரம்

உள் நாட்டில்

| | |
|---|---|
| ஒரு வருடம் | 150–00 |
| ஆறு மாதங்கள் | 75.00 |
| தனிப்பிரதி | 10.00 |

வெளிநாடுகளில்
ஒருவருடம்
25 அமெரிக்க டொலர்
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி
**இ. தம்பையா**
S-47, 3வது மாடி,
கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட்,
கொழும்பு 11, இலங்கை.
தொலைபேசி. 435117, 335844


### வெளி வராமைக்கு வருந்துகின்றோம்!

புதிய பூமி ஏற்கனவே அச்சுப்பதிப்பு செய்யப் பட்டு வந்த நிறுவனத்தில் ஏற்பட்ட இடமாற்றச் சிக்கலால் தை, மாசி, பங்குனி இதழ்கள் வெளிவர இயலவி ல்லை. அதற்காக வருந் துகின்றோம் இவ்விதழ் முதல் புதிய பூமி தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நிர்வாகக் குழு
புதிய பூமி

நன்றி - நூலகத்திட்டம்

# குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்



- வடக்கில் காங்கேசன்துறை துறைமுகம் வெளிநாட்டு உதவியுடன் பாரிய அபிவிரு த்திக்கு உட்படுத்தப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படும் போது மூன்றாம் கட்டத்தில் சக்திமிக்க கடற்படைத்தளமும் நிர்மாணிக்கப் பட இருப்பதாகவும் அறிய முடிகிறது. வடக்கின் ஒவ்வொரு அபிவிருத்தியோடும் இராணுவ அபிவிருத்தி இணைக்கப்ட்டு வருவதுதான் வடக்கு அபிவிருத்தியின் மகிமையாகும்.
- குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தியதில் அரசாங்கத்திற்கு மகா சந்தோசம். அதில் பங்கு கொண்டு நின்றதில் தமிழ் இயக்கங்களுக்கு இரட்டித்த மகிழ்ச்சி. ஆனால் யாழ். மாநகர சபையை பிடிக்கமுடியவில்லையே என்பதில் அவர்களுக்கு பலத்த கவலை. ஒன்பது உறுப்பினர் களுடன் மாநகர ஆட்சி அதிகாரக் கட்டில் ஏறியிருப்பதில் கூட்டணிக்கு மெத்தக் குதூகலம். ஆனால் அடிபட்டு நிற்கும் இவர்கள் எதனைக் கிழிக்கப் போகிறார்கள் என்பது தான் மக்கள் கேட்கும் ஒரே கேள்வி.
- சாதிகள் உள்ளதடி பாப்பா, அங்கு சண்டைகளும் நடக்குதடி பாப்பா. அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் சங்கரத்தைச் சந்தியில் சாதி மோதல் இடம் பெற்றது. இதில் இருபது பேர்களுக்கு மேல் காயங்கள் அடைந்து யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். அத்துடன் நில உழுகை, மரம் நாட்டல், பாளை வெட்டு ஆகியனவும் நடை பெற்றன. என்று தணியும் இந்த சாதி மோகம்.
- யாழ் நகரமும் ஏனைய சிறு நகரங்களும் இயல்புக்குத் திரும்பி விட்டதாகக் கூறப்படுகிறது. அது எவ்வளவு என்று கணக் கிட்டுத்தான் கூறவேண்டும். ஆனால் அங்கு நிலை கொண்டுள்ள இயக்கங்கள் வர்த்தகர்களிடம் வசூல் பண்ணும் பழைய இயல்பை மீண்டும் ஆரம்பித்துள்ளன. அவைமிக மறைமுகமாகவும் சீரித்தும் முறைத்தும் பெற முயற்சிக்கப் படுகிறது. இவை தற்போது அம்பலத்திற்கு வரவும் செய்துள்ளன. வர்த்தகர்களிடம் வசூல் நடத்தினால் அது யாரை உதைக்கும் என்பதுதான் மக்களுக்கு கவலை தரும் விடயம். இதில் குடாநாட்டு மக்கள் நிறையப் பட்டுக் கழைத்தவர் களாகவே உள்ளனர்.
- குடாநாடு முற்று முழுதாக இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் வந்ததாகவே இதுவரை கூறப்பட்டது. ஆனால் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களும் அங்கு உண்டு என்ற செய்தி தற்போதுதான் வெளிவந்திருக் கிறது.
- குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு பெரிய மருத்துவமனை யாழ் போதனா வைத்தியசாலையாகும். அங்கு மருந்துகள் தட்டுப்பாடு வருவது இயல்பு. அப்படியானால் ஆதாரவைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகளின் நிலை எப்படி இருக்கும். யாழ் போதனா வைத்திய சாலையில் உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துகளுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் ஓரிருவர் அங்கு இறந்து விட்டதாகவும் அறிய முடிகிறது. இவையும் இயல்பு வாழ்வின் ஒரு பகுதியென ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். யாழ் மாவட்டத்திற்கு பத்து பாரா ளுமன்ற உறுப்பினர் இருக்கி றார்கள். பாவம் அவர்கள் தான் என்ன செய்வது? அதிகாரம் அவர்களிடம் இல்லையே! என்று அமைதி கொள்ள வேண்டியதுதான்.

# மறைந்த கிருஷ்ணன் விலைபேசாத கல்விமான்

மலையகத்தில் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை செலுத்தி பாடுபட்ட செல்லையா கிருஷ்ணனின் இறப்பு மலையகத்தில் அண்மையில் நடைபெற்ற முக்கியமானதொரு இழப்பாகும். இடதுசாரி அரசியல் கட்சிகளினூடாக மலையக மக்களிடம் ஆரம்பத்தில் பரவலாக அறியப்பட்ட இவர் மஸ்கெலியா சென். ஜோசப் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி, இராகலை தமிழ் மகாவித்தியாலயம், ஆகியவற்றில் அதிபராக இருந்தார். இக்காலகட்டத்தில் மலையக கல்வி வளர்ச்சிக்காகபல்வேறு வழிகளிலும் பாடுபட்டார்.

மலையக மக்களிடையே சீர்திருத்த கருத்துக்களையும், சீர்திருத்த இயக்கங்களையும் நடத்தினார்.

1977ஆம் ஆண்டு மே மாதம் டெவனில் சிவனு லெட்சுமணன் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் சென்றபோது அக் கல்லூரிக்கு அதிபராக இருந்தார். ஊர்வலம் சென்ற மாணவர்கள் தாக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட நிலைமைகளையும், சவால்களையும் மிகவும் அவதானமாக முகம் கொடுத்தவராவார்.

இவரது இறுத் காலத்தில் மலையகத்திலுள்ள இடதுசாரி முற்போக்கு சக்திகள் ஐக்கியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பலருடன் கலந்துரையாடினார்.

இவர் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகளால் விலை பேச முடியாத இடதுசாரியாகவும், கல்வி மானாகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக இளைஞர் தொடர்ச்சி

கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

அதேவேளை கொழும்பில் வேலை செய்து வரும் மலையக இளைஞர்கள் கைதாக்கப்படுவதும் தற்போது அதிகரித்து வருகின்றது. அவர்கள் வேலை செய்யும் ஆதாரங்கள் காட்டப்பட்டு ஏனைய ஆவனங்கள் வைத்திருந்தும் தமிழர்கள் என்பதற்காக கைதாகித் தடுத்து வைக்கப்படுகின்றனர். அதே போன்று மலையகத்தில் இருந்து கொழும்பிற்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் பிரயாணம் செய்யும் வழிகளில் கைதாகி தடுத்து வைக்கப்படுகின்றனர். மேற்படி கைது செய்தி உரிய உறவினர்களுக்கு சென்றடைவதற்கு முன்பே விளக்க மறியலுக்கு அனுப்பப்படுகின்றனர். உறவினர்கள் தலைநகர் மற்றும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு வந்து பெருந்தொகைப் பணத்தைச் செலவளித்து அலைந்து செல்கின்றனர். அதற்கும் வசதி இல்லாதவர்களாயின் இளைஞர்கள் மாதக்கணக்கில் விளக்க மறியலில் வாடுகின்றனர். இத்தகைய அநீதிகளையும் அடாவடித்தனங்களையும் எந்த மலையகத் தலைமைகளும் கவனிப்பதாக இல்லை. ஆனால் பதவித் தலைமைக்கு மட்டும் முன் நிற்கிறார்கள்.

# ஒரு மலையக மாணவனின் டயறி

எஸ். உதயசூரியன்

1.12.97 – 5.12.97 வகுப்பேற்றப் பரீச்சைகள் நடைபெற்றன. வியாழன் க.பொ.த. உயர்தரம் படிக்கும் அண்ணன்மார்கள் தமிழ் பாடம் பாட்சைக்குக் தோற்றியும் விடைஎழுதாது வெளியேறிவிட்டனர். ஆசிரியர்கள் அவர்களை 'புறம்நின்று' ஏசினார்கள் படிச்சுக்குடுக்காட்டி என்னா டெஸ்ட் பேப்பர எழுதவேண்டியதானே என்று பண்டாரம் வாத்தியர் கத்திக் கொண்டு போனார். பண்டாரம் என்பது பட்டப்பெயர் நெற்றியிலே மூனு கோடு பட்டை அடிச்சிருப்பாரு பெரிய சந்தனப்பொட்டு, கழுத்தையும் நெற்றியிலும் நினைத்துக் கொண்டு பெரிய பட்டை அடிச்சிருப்பாரு. பார்க்க ஏதோ பெரியசாமியாரு மாதிரி இருக்கும். ஆனா செயற்பாடுஎல்லாம் வேறு என்னவோ பொம்பள புள்ளக இந்த ஆளகண்டாலே பயம். பாடசாலையில் நடக்கும் எல்லா பூசையிலும் பூந்து வெளையாடுவாரு வெள்ள வேட்டியடிச்சி இடுப்புல முருகா துண்டு எல்லாம் கட்டி பெரிய சங்கிலி ஒன்று போட்டு கண்ணைகூட ஏதோ ஒரு மாதிரி வைத்துக் கொண்டு இருப்பார். ஆனால் வகுப்புக்கு போறதுன்னா இந்தாளுக்கு அலர்ஜி மாதிரிதான் அப்புடிவந்தாலும் மொனிட்டரை பாடத்தை வாசிக்க விட்டு விட்டு எங்களை எல்லாம் அமைதியாக இருந்து கேட்கச் சொல்லி 'இந்த ஆளு ரமணிச்சந்திரன்' புத்தகம் வாசிக்கத் தொடங்கிடுவாரு, "எங்களுக்கு இந்த வருசம் ஒரு தமிழ் பாடம் கூட ஒழுங்கா நடக்கவில்லை நாங்க எப்படி மாகாணசபை பரீட்சை வினாத்தாளுக்கு விடை எழுத முடியுமுனு" பதிலுக்கு மாணவர்களும் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். அதிபர், உப அதிபர், ஒட்டு அதிபர்கள், வெட்டு அதிபர்கள் சரணகதி அதிபர்கள் ஆகியோரில் ஒருவரும் அந்தப்பக்கம் வரவில்லை.

வெள்ளிக்கிழமை பொருளியல் பாடத்திற்கும் உயர்வகுப்பு மாணவர்கள் தோற்றாமல் வெளியேறி சென்றார்கள். க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இன்னும்ஆறுமாதங்கள் தான் உள்ளன. இன்னும் கூட இவர்களுக்கு முறையான படிப்பு நடைபெறவில்லை என நினைக்கும் போது எனக்கும் கவலையாக இருந்தது. அட்டன், கொட்டகலை, தலவாக்கலை பகுதியில் ஒரே டியூசன் மயம் காசைச் கொடுத்தாவது பிள்ளைகள் படித்துக் கொள்வார்கள். ஆனால் இங்கு டியூசன் கடை அவ்வளவு நன்றாக விருத்தியடையவில்லையே, வகுப்பில் முறையாக எட்டுப்பாடம் ஒழுங்கா படித்துக் கொடுக்கப்பட்டால் இந்தப் பிரச்சினையெல்லாம் இல்லையே.

இவ்வளவு பிரச்சினைகளுக்குள்ளும் வியாழன் சாமிபூசையும் வெள்ளி ஏனைய சாமிகளின் பூசையும் நடைபெற்றன.

8.12.97 – 10.12.97

திங்கள் மூன்று வகுப்புகளுக்கு மட்டும் றிப்போட்சீட் கொடுக்கப்பட்டது. மற்றைய வகுபபுகளுக்கு பின் (எப்போதாவது) கொடுக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆண்டு இரண்டில் ஒன்பது பேரும், ஆண்டு ஏழில் பத்துப் பேரும் ஆண்டு எட்டில் பதினைந்து பேரும் பெயில் என்பது அறிவிக்கப்பட்டது.

செவ்வாய் பாடசாலை சென்றபோது எல்லா மாணவர்களும் கவலையுடன் இருப்பதை காணமுடிந்தது. திங்கள் மாலை ஆண்டு ஏழில்படிக்கும் ஒரு மாணவன் நஞ்சு குடித்து தற்கொலை செய்து கொண்டதாக முரளி சொன்னான் அவன் மிகக்கஸ்டமான குடும்பதிலிருந்து வருவதாகவும் கஸ்டப்பட்டு படித்ததாகவும், ஆனால் வகுப்பேற்றப் பரீட்சையில் பெயிலாகி விட்டதால் மனமுடைந்து போய் அழுது கொண்டிருந்ததாகவும் அவர்களது வீட்டில் எல்லோரும் ஏசியதால் தாங்கிக் கொள்ள முடியாது நஞ்சு குடித்துவிட்டதாகவும், சரஸ்வதி அக்கா சொல்லிக் கொண்டிருந்தார். அந்த வகுப்பில் இன்னும் ஒன்பது பேர் பெயிலாகி இருக்கின்றார்கள் என நினைக்கும் போது பயமாகவும் கவலையாகவும் இருந்தது.

ஆண்டு ஆறு ஏழிலதான் பாடமே நடக்கிறதில்லையே அப்புறம் எப்படி பெயில் போட்டாங்கன்னு, ரவி அண்ணன் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். ஆண்டு ஆறு, ஏழு, எட்டு, வகுப்புக்கள் கீழே ஒரு மூலையில் உள்ளன அந்த வகுப்புகளுக்கு போதுமான வெளிச்சம் வருவதில்லை இடவசதியும் போதாது கரும்பலகை ஒழுங்காக இல்லை. அதனாலதானே என்னவோ அந்த வகுப்புகளுக்கு பாடம் நடப்பதேயில்லை. ஒரே சத்தமாக இருக்கும் கிட்டதட்ட இருநூறு மாணவர்கள் இருக்கும் இந்தவகுப்புகளில் பாடம் நடக்காததையிட்டு யாருமே கவலைப்படுவதில்லை. ஆண்டு ஐந்து ஸ்கொலர்சிப் பிள்ளைகளுக்கு மட்டும் பாடம் நடக்கும் அப்புறம் ஆண்டு பதினொன்றில் தான் ஒரளவுபாடங்கள் நடக்கும் இதையேல்லாம் யோசிக்கும் போது ரவியண்ணன் கூறியது ஞாயமாகவே பட்டது. எல்லாருமே நஞ்சு குடிச்சி என்று அரைவேக்காடு செல்வராஜ் சேர் கூறிக்கொண்டு போனார். இந்த ஆளுக்கு எல்லாமே வேறமாதிரிதான் தெரியும் என்பதால் யாரும் அலட்டிக்கொள்ளவில்லை.

பெயிலானவங்கள் எல்லாம் பாஸ்பண்ணி விடவேண்டும் இல்லாட்டிப்போனால் பெரிய பிரச்சினையாகி விடும் என்று சிவலிங்கம் சேர் கூறிக் கொண்ட சென்றார்.

புதன் மாமா வந்திருந்தார் தலவாக்கலை பகுதியிலும் ஒரு பாடசாலையில் பயிலும் மாணவி ஒருத்தி தான் வகுப்பேற்றப் பரீச்சையில் பெயிலாகி விட்டதால் தனக்குதானே நெருப்பு வைத்துக் கொண்டதாக கூறினார் இதை கேள்விப்பட்டு மிக மனவேதனையடைந்தேன்.

பரீட்சையில் மாணவர்கள் பெயிலாகி விட்டால் தற்கொலை செய்வது பிழையான வழிமுறையே ஆகும். மிண்டும் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். படிப்பில் கூடிய கவனஞ் செலுத்தவேண்டும். பல்வேறுபட்ட புத்தகங்களை வாசித்து புதிய விடயங்கள் பலவற்றை அறிந்த கொள்ளவேண்டும். வீட்டில் முறையாக டைம் டேபிள் போட்டு படிக்க வேண்டும். கூட்டாக இருந்து படிக்கலாம் வகுப்பறையில் கூட சுய கற்றலை மேற்கொள்ளலாம். தோல்வி துன்பம் இவற்றிற்கு தற்கொலைதான் வழிமுறையென்றால் உலக சமூகம் எப்பொழுதோ அழிந்து போயிருக்கும் சகலதையும் சவாலாக எடுத்து அதனை வெற்றி கொள்ள தொடர்ந்து போராடுவதே சரியான வழிமுறையாகும். என்பதை என்னால் விளங்கிக்கொள்ள கூடியதாகவிருந்தது

15.12.97 – 4.01.98

லீவுகாலத்தில் அம்மாவுக்கு உதவியாக பல வேலைகள் செய்தேன் மாக்சிம் கோர்க்கி எழுதிய தாய் நாவலை ரவி அண்ணனிடமிருந்து பெற்று வாசித்தேன் ரஷ்யாவின் பாட்டாளிவர்க்க புரட்சி நடைபெற்ற காலத்தில் எழுதப்பட்ட இந்நாவலில் வரும் பாத்திரங்கள் எனக்கு பற்பல உணர்வுகளை வழங்கின.

நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தம் நடாத்தும் ஆட்சியும் தீர்வை மறுக்கும் எதிர்க்கட்சியும்

வெண்புறாக்களைப் பறக்க விட்டார் கள். வெள்ளைக்கொடி ஏந்தினார்கள். இனப்பிரச்சினை உண்டு என்று உரக்கக் கூறினார்கள். யுத்தம் அதற்கு வழி முறை அல்ல என்றும் பேச்சு வார்த்தையும் அரசியல் தீர்வுமே வழி முறை என்றார்கள். மக்கள் இவற்றை ஏற்று நம்பிக் கையுடன் ஆதரித்து வாக்க ளித்தார் கள். பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சியில் அமர்ந்து கொண்டது. ஒன்பது



மாதங்கள் மட்டுமே யுத்த ஓய்வு கிடைத்தது மக்களுக்கு. ஓய்வுகாலத்தில் உள்ளூரத் தயார் செய்யப்பட்ட தயாரிப்புக ளுடன் யுத்தம் மும்மரமாக முன்தள்ளப்பட்டது. பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என முன்நின்றவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். யுத்தம் தான் ஒரேவழி என்றும் அதன் பின்பே அரசியல் தீர்வு எனக் கொண்ட யுத்தவாதிகள் முன்னிலைக்கு வந்தனர். எத்தகைய விலை கொடுத்தும் யுத்தத்தின் மூலம் புலிகளைப்பலவீனப்படுத்தி அல்லது ஓரம் கட்டி ஏதோ ஒரு தீர்வு என்னும் பெயரில் ஒன்றைக் கொடுப்பது என்பதைத் தீர்மானமாக்கிக் கொண்டனர். அதற்காக அரசியல் தீர்வுப் பொதி முன்வைக்கப்பட்டது. அதனைக் காட்டி யுத்தத்தின் மூலம் சமாதானம் என்பது ஆட்சியின் யுத்தக் கொள்கை ஆக்கப்பட்டது. அடிப்படையில் அரசியல் தீர்வுப் பொதி இனப் பிரச்சினைக்கான சமாதானத்தீர்வுக்கானது என்பதை விட யுத்தத்தை நடாத்துவதற்கான ஒரு வகையான அரசியல் தந்திரபோபாயமாகவே நகர்த்தப்பட்டது.


வருடாந்தம் ஐயாயிரம் கோடிரூபாய்களை விழுங்கிக் கொள்ளும் இவ் யுத்தம் வடக்கு கிழக்கையும் தமிழ் முஸ்லீம் மக்களையும் என்றுமில்லா தவாறு பாதித்து அழிவுகளைக் கொடுத்து நிற்கிறது. அத்துடன் சிங்கள மக்களையும் நாட்டின் சகல துறைகளையும் யுத்தம் ஊடுருவி பன்முக எதிர்விளைவுகளைத் தோற்றுவித்துள்ளது. யுத்தக்கெடுபிடிகளும் அங்காங்கே இடம் பெறும் குண்டு வெடிப்புகளும் வடக்கு கிழக்கிற்கு அப்பாலும் யுத்தம் விரிவடைந்து வரும் அபாயத்தை அடையாளம் காட்டி நிற்கிறது.

யாழ்ப்பாணத்தை விடுவித்ததாகக்கூறும் யுத்த மானது இன்று தரைப்பாதையைத் திறப்பது என்ற பெயரில் கர்ணகடூரமாக நடாத்தப்படுகிறது. வன்னி நிலப்பரப்பை ஊடறுத்து முன்னெடுக்கப்படும் யுத்தத்தில் இருதருப்பிலுமே நளாந்தம் மனித உயிர்கள் மடிந்து கொள்வதுடன் பொதுமக்களின் உயிர்களும் உடமைகளும் அழிந்து வருகின்றன. வன்னி வாழ் மக்கள் யுத்தப் பிரதேசத்தில் வாழ்வதால் அவர்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கு என்ன? என்றவாறே அரசாங்கம் நடந்து கொள்கிறது. உணவு மருந்து பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இன்றி வறுமையாலும் நோயாலும் வன்னியில் மக்கள் வாடி வதங்கி நடைப்பிணங்கள்போல் வாழ விடப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட இடங்களில் பட்டினி மரணங்கள் சம்பவித்துள்ளன.இன்றைய இவ் யுத்தத்தை நடாத்தவதற்கு ஒரு அடிப்படைத் தேவை இருக்கிறது. அத்தேவை ஏகப்பட்ட மக்கள் நலன் சார்ந்தவை அல்ல. முற்றிலும் உயர் வர்க்க சக்திகளது நலன்கள் கொண்டவையாகும். ஒன்று நாட்டின் பேரினவாத பௌத்த சிங்கள சக்திகள் இன மத அடிப்படையில் ஏனைய தேசிய இனங்களின் கோரிக்கை உரிமைகளை மறுக்கும் தேவையை நிறைவு செய்வது. இரண்டாவது, இவ் யுத்தத்தின் மூலம் உயர்வர்க்க சக்திகள் என்போர் பல்வேறு மட்டங்களிலும் ஆயிரம் லட்சம் கோடி என்ற நிலைகளில் சம்பாத்தியம் பெற்றுக் கொள்கிறார்கள். மூன்றாவது, நாடும் மக்களும் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எனையவற்றுக்கும் யுத்தம் ஒரு திசை திருப்பியாக இருப்பது. நான்காவது திறந்த பொருளாதாரத்தின் சகல நச்சுத்தனங்களையும் நாட்டிற்குள் வரவழைத்து அவற்றை நிலைப்படுத்திக் கொள்ள பல்தேசியக் கம்பனிகளுக்கு யுத்தம் சிறந்த வாய்ப்பை வழங்கிநிற்கிறது. ஐந்தாவது, ஏகாதிபத்திய சக்திகளுக்கும் ஏனையவர்களுக்கும் ஆயுத வியாபாரத்தை நடாத்தவும்



கொள்ளை லாபம் பெறவும் வாய்ப்பாக உள்ளது. ஆறாவது இலங்கை நாடு இன்றைய யுத்தத்தால் சகல வழிகளிலும் பலவீனமடைந்து ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கோ அன்றி உள்நாட்டின் சமூக அமைப்பை மாற்றுவதற்கான அரசியல் பலத்தைப் பெறுவதற்கோ சக்தியற்ற மக்களாக்கிக் கொள்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகிறது. ஆதலால் இன்றைய யுத்தம் ஆளும்வர்க்கத்தினருக்கு மிகவும் தேவையான தொன்றாக இருக்கிறது. ஆனால் மக்களுக்கு ஒரு கணம்தானும் தேவையற்றதாகவே காணப்படுகிறது. எனவே இன்றைய யுத்தம் முற்றிலும் அநீதியான யுத்தமேயாகும்.

இவ்வாறு யுத்தம் முழு மூச்சாக முன்னெடுக்கப்படும் அதேவேளை பெயரளவில் வைக்கப்பட்ட அரசியல் தீர்வு என்பது நாளுக்குநாள் பலவீனமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. அத்தகைய ஒன்றைக் கூட எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மறுத்து நிராகரித்து நிற்கிறது. அவர்களது நிலைப்பாடு பேரினவாதத்தை நிலை நிறுத்திப் பாதுகாக்கும் ஒன்றேயாகும். யுத்தம் சரியாகச் செய்யப்படவில்லை என்பதும், யுத்தத்தின் ஆதாயங்கள் தமக்குக் கிடைக்கவில்லையே என்ற கவலையும் தான் ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு உண்டே தவிர வேறு



எதுவும் இல்லை. ஆட்சி அதிகாரத்தில் இருந்து ஆண்டு அனுபவித்து ருசி கண்டவர்கள் அதனால் அதன் அருமை பெருமையை நன்கு அறிவர். அதனாலேயே ஆட்சி அதிகாரப் பசியுடன் வீதியில் இறங்கிநிற்கின்றனர். ஒவ்வொரு துரும்பையும் எடுத்து அரசாங்க த்திற்கு எதி ராகப் பயன் படுத்துகிறார்கள். தீர்வு ஒன்று வரக் கூடாது என்பதிலும் தமிழ் முஸ்லீம் மக்கள் இந்தநாட்டில் செடிகொடிகள் என்பதும் தான் அவர் களது அடிப்படை நிலைப்பாடாகும். ஆனால் ஆட்சிக்கு மீண்டும் வந்து விடவேண்டும் என்பதற்காக மக்கள் மீது பற்றும் பாசமும் வைத்திருப்பதாக நடித்துக் கொள்கின்றனர். எதிர் கட்சியிலிருந்து தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசுவது போன்று நடந்து கொள்வதும் அரசாங்க நிலைக்கு வந்தவுடன் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதும் மாறி மாறி இடம் பெற்றவைதான். அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி உரிய பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வைக்காணும் உறுதிநிலைப்பாட்டை எடுக்காது விடின் அதுவே ஐக்கிய தேசியக் கட்சியினரை பலமடையச் செய்வதாக அமைந்து விடும். அது அடுத்த அரசாங்கமாக அவர்களை தூக்கிவிடும் செயல் முறையாகவும் மாறிக் கொள்ள இடம் உண்டு. தமிழ்மக்களது உரிமைகளை மறுத்து முன்வைக்கப்பட்ட தீர்வுகளை நிராகரித்துக் கொண்டதன் வாயிலாக ஆட்சி அதிகாரத்திற்கு வந்த நடைமுறையில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி விடுபட மறுத்து நிற்கும் போக்கையே இன்றைய அதன்நிலைப்பாடு எடுத்துக் காட்டுகிறது.

## போராடும் மண்ணும் பலியாகும் மைந்தரும்

இந்தப்போர் தவிர்த்திருக்க கூடியதும் தவிர்த்திருக்க வேண்டியதும் என்பதில் என்னுடன் பலரும் உடன்படுவர். மக்கள் மத்தியிலான ஒரு முரண்பாடு சுரண்டும் வர்க்கங்களது இலாபத்திற்காக வளர்க்கப்பட்டு இனப்பகையாக விகாரப்படுத்தப்படும் போது மக்கள் அனாவசியமான இழப்புக்களைச் சந்திக்க நேருகிறது. இந்தப் போர் பற்றிய பல உண்மைகள் போராடும் இரு தரப்பினராலும் தம்மைச் சார்ந்தோரிடமிருந்து மறைக்கப்படுகின்றன. மக்கள் அனைவரும் இந்தப் போர் பற்றிய உண்மைகளை அறிந்தால், உறுதியாக இந்தப் போருக்கு எதிரான ஒரு வலிய இயக்கம் வளரும். அது ஆட்சியாளர்களுக்குப் பிடித்தமான ஒன்றல்ல. போரின் எசமானர்கட்கும் எல்லாரையும் ஆட்டிவைக்கும் போரின் விற்பனையாளர்களான ஏகாதிபத்தியவாதிகட்கும் பிடித்தமான ஒன்றல்ல. இந்தப் போரால் ஏற்படும் அழிவுகள் பற்றிப் பேசிக்கொண்டே மேலும் அழிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையே நாட்டின் அதிகாரத்தில் உள்ளோர் எடுக்கின்றனர். இந்த போருக்குக் காரணமான யூ.என்.பி ஒரு அமைதியான தீர்வுக்கு எதிராக் தன்னால் இயலுமான யாவற்றையும் செய்கிறது. ஜே.வி.பி. தனது கடந்தகால இனவாத அரசியலின் தவறுகளை இன்னமும் உணராதது போல சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டுள்ளது. தமிழ் இன விடுதலை பேசுவோர்களில் இந்த நாட்டின் ஆட்சியர்களுடனும் அயல் நாட்டினருடனும் இணைந்து செயற்படுவோர் உட்பட எல்லோருமே இந்தப் பிரச்சினையை இரண்டு தேசிய இனங்கட்கு இடையிலான ஒரு பகையாகவே சித்தரித்துப் பிழைப்பு நடத்துகின்றனர். மனித உரிமை பேசுவோர் பலரும் மனித உரிமையைத் தங்களது அரசியல் நோக்கங்களை மூடிமறைக்கும் முகமூடியாகவே பயன்படுத்த காண்கிறோம். ஒரு மனித உரிமை மீறலைக் காணும் மனித உரிமைக்காரர் பலர் இன்னொன்றைக் காண மறுப்பது போல அபத்தம் இல்லை. இது இன்றைய யதார்த்தத்தின் அபத்தம்.

இன்னும் பல இளையோர் தமது உயிரைப் போரில் இழக்கின்றனர். வறுமை சிலரை அங்கு அனுப்புகிறது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை சிலரை அங்கு அனுப்புகிறது. இவர்களிற் சிலபகுதியினர் உயிருடன் மீளலாம். ஆயினும் இந்தப் போரின் மனவடுக்களும், உடல் ஊனங்களும், அவர்களை விட்டுப் போவது ஐயத்துக்குரியது. இந்தப் போரில் ஈடுபடாமலே தமது எதிர்காலத்தை இழக்கும் பல இளவயதினர் உள்ளனர். போரின் பாதிப்புக்கள் நேரடியான இழப்புக்கள் மட்டுமல்ல. போர்ச் சூழல், நிர்ப்பந்திக்கும் இடப்பெயர்வும் புலப்பெயர்வும் அகதி முகாம் வாழ்வும் மனிதர் மீது ஏற்படுத்தும் தாக்கம் பெரிது. பிஞ்சு மனங்களில் அவை வாழ்க்கை பற்றிய தவறான பார்வைகட்கு வித்திடுகின்றன. சமுதாயமும் மனித வாழ்வும் பற்றிய விழுமியங்கள் அன்றாட அனுபவங்களினின்றே சிறு வயதினரது உள்ளங்களில் பதிவாகின்றன. போர் சூழல் வழமையான சமுதாயம் பற்றிய ஒரு பார்வையை இயலாதாக்குகிறது. குறிப்பாக, எதற்காக இந்தப் போர் என்பது விளங்காமலே அதற்குப் பல வகைகளிலும் பலியாகுவோரின் மனநிலை மிகவும் சங்கடமானது.

போர்கள் தவிர்க்கப்பட வேண்டியன. ஆயினும் சமூக அநீதிகள் மக்கள் மீது போரைத் திணிக்கின்றன. எதிர்த்துப் போராடாமல் அழிவதா, போராடி வாழ்வதற்கு முயல்வதா என்ற அடிப்படையிலேயே அடக்கு முறைகட்கும் அநீதிக்கும் எதிரான நீதியான போராட்டங்கள் எழுகின்றன. அவ்வாறு எழும் போராட்டங்கள் மக்கள் போராட்டங்களாக அமையும் போது முழுச் சமூகமும் ஒரு அமைப்பாகச் செயற்படுகிறது. பிரச்சினைகளை வெறுமனே மொழி, மதம், இனம், நாடு என்ற அடிப்படையில் நோக்காமல் அரசியல் அடிப்படையில் அணுகவும் சுமுகமாகத் தீர்க்க கூடிய பிரச்சனைகளைப் போர் மூலமே தீர்க்க வேண்டிய பிரச்சனைகளினின்று வேறு படுத்தவும் இயலுமாகிறது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் இரு தரப்பிலும் மக்களின் பேரால் யுத்தம் நடத்தப்படுகிறது. ஆயினும் மக்களின் எண்ணங்கள் எவ்வளவு தூரம் கணிப்பிலெடுக்கப்படுகின்றன? கடந்த 15 வருடங்களாக நடக்கும் இப் போரில் மக்கள் கண்டதென்ன? இப்போர் நிகழும் மண்ணில் மக்களின் நிலை பற்றி நாட்டின் பிற பகுதிகளில் உள்ளோருக்குத் தெரியுமா? இப்போரால் நேரடியாகப் பாதிக்கப்படாத பகுதிகளில் வாழும் பெரும்பாலான மக்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பற்றி எவ்வளவு தூரம் உண்மைகள் தெரியக் கிடைக்கின்றன? விரும்பியோ விரும்பாமலோ, இருதரப்பிலும் இப்போர் தமிழருக்கும் சிங்களவர்கட்குமிடையிலான ஒரு போராகவே காட்டப்படுகிறது. போரில் பங்குபற்றாதவர்கள் கூடத் தேசிய இனப் பிரச்சனையை இரண்டு இனங்கட்கு இடையிலான பிரச்சினையாகவே காணமுனைகின்றனர். இந்த நிலை தொடரும்வரை, இந்த இனங்களிடையிலான சில முரண்பாடுகள் யாவுமே பகை முரண்பாடுகளாகச் காட்டப்படவும் அதன் மூலம் போரைத் தொடரவும் இயலுமாயிருக்கும். இப்போரில் எவருக்கும் வெற்றி கிடைக்கப் போவதில்லை, ஆயுத வியாபாரிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் பிராந்திய ஆதிக்கவாதிகளும் உடனடியாக நன்மைகள் பெறுகிறார்கள். ஊழல்காரர்கள், கொள்ளைலாபம் தேடுவோர் போன்றவர்க்கட்கும் நன்மை தெரிகிறது. அரசு சாரா நிறுவனங்கட்கு இது நல்ல பிழைப்பாக இருக்கிறது.ஆயினும் போருக்குப் பலியானோர் பலர், யாரும் காணாமலே அழிகின்றனர்.

போரால் உடலும் மனமும் வெவ்வேறு அளவுகட்குப் பாதிக்கப் பட்டவர்கட்குப் பரிகாரம் தேடும் முயற்சிகள் ஒரு பிரச்சினையைத் தீர்க்க முதல் புதிதாக நூறு முளைக்கின்றன. அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அமைதியான நியாயமான சமாதானத் தீர்வு பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையை இன்னமும் பின்போடமுடியாது.

இந்தப் போர் இவ்வாறே தொடருமானால் அடுத்த சந்ததியினர் இந்தப் போரின் வடுக்களுடனேயே வளருவர், சமூக நீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் மனித வாழ்வின் மேம்பாட்டுக்குமாக உழைக்க வேண்டிய ஒரு இளைய பரம்பரையை நம்பிக்கையற்றவர்களாகவும் சக மனிதர்களைப் பகைமையுடனும் சந்தேகத்துடனும் நோக்குவோராகவும் சீரழிக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது.?

தேசியவாதம் வரலாற்றில் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிராகப் போராடும் போது மட்டுமே முற்போக்கான ஒரு பங்கை ஏற்கமுடியும். அங்கு கூடத் தேசியவாதச் சிந்தனையின் ஆதிக்கம் விடுதலைப் போராட்டத்தை எளிதாகவே ஒரு மக்கள் விரோதப் பாதையில் தள்ளிவிட முடியும். இதை நமது அண்மைய வரலாறு பேரினவாதத்தையும் குறுகிய தேசியவாதத்தையும் பற்றி நிறையவே கற்பித்துள்ளது. அவற்றின் பெரும்பகுதி போரின் பாடங்களாகவே உள்ளன. நாம் அவற்றை இது வரை கற்றிராவிடின், நமது குழந்தைகளது எதிர்காலத்திற்காகவேனும் கற்பது பயனுள்ளது.

பலியாகும் நமது குழந்தைகளின் பேரால் இந்தப் போரின் எசமானர்கட்கு எதிராக ஒன்றுபட்டு நிற்போமாயின், ஒரு வரலாற்றுத் துரோகத்திற்கு இந்த மண்ணும் அதன் எதிர்காலமான அதன் மைந்தரும் பலியாகாமல் நம்மால் தடுக்க முடியுமாயிருக்கும். நாம் வென்றால் நமக்கு வரலாறு நன்றி கூறாது போயினும் பரவாயில்லை. நாம் தோற்றால் நமக்கு வரலாறே இல்லாது போய்விடும்.

*சி.சிவசேகரம்*

நன்றி - நூலகத்திட்டம்



# ஐம்பது ஆண்டுகள் : ஆருடைய சுதந்திரம்?

பெப்ரவி 4ம் நாள் இலங்கை சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன இந்தச் சுதந்திரம் அடுக்கடுக்கா ஐரோப்பிய கொலனிய எசமானர்கள் மூவர் ஆண்ட நாலு நூற்றாண்டுகால அடிமைவாழ்வின் முடிவு என்று,இந்த மண்ணின் ஏகாதிபத்திய தாசர்கள் சிலர் போக, எல்லோருமே கொண்டாடிய ஒரு சுதந்திரம் பல கொலனி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு சுதந்திரத்திற்காக இரத்தம் அதிகம் சிந்தப்படவில்லை. ஆயினும், சும்மா வந்தல்ல இந்தச்சுதந்திரம். உண்மையான சுதந்திரத்தை வேண்டியவர்கள் இன்னல் கட்கு ஆளாக்கப்பட்டனர். எசமானர்களுடன் சமரசம் வேண்டியவர்கள் சலுகைகள் பெற்றார்கள். சுதந்திரத்தின் பின்னான ஆட்சி அதிகாரம் அவர்களிடமே வழங்கப்பட்டது.



1917 ஒக்ரொபர் புரட்சியின் பின்பு கொலனித்துவத்தின் முடிவு பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இரண்டாம் உலகப்போரின் பின்பு ஐரோப்பியக் கொலனிய எசமானர்களில் முக்கியமானவரான பிரித்தானியரும் பிரான்சுக்காரரும் மிகவும் தளர்ந்து விட்டனர். கொலனிகள் ஒவ்வொன்றிலும் அடிமைப்பட்ட மக்களது கோப உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிய பின்னர் நேரடியான கொலனி ஆட்சி இயலாத ஒன்றாகி விட்டது. எனவே தமது சூத்திரப்பாவைகளைக் கொண்டு நாடுகளை ஆளுவதே பொருந்தும் என்று கொலனி எசமானர்கள் கணக்கிட்டனர். இதுவும் ஓரளவுக்கே வெற்றிபெற்றது. ஏனெனில் மக்கள் கொலனித்துவத்தின் சில எச்ச சொச்சங்களை எறிந்துவிடத்துடித்தனர் இதன் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் அடையாளமாகவே 1956ல் யூ.என்.பி. ஆட்சி தூக்கியெறியப்பட்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. ஒரு கூட்டாட்சி நிறுவப்பட்டது. இவ்வகையில், இலங்கையில் மக்கள் மத்தியிலிருந்த அரசியல் விழிப்பு பல மூன்றாம்முலக நாடுகளில் இருந்ததை விடச் சிறப்பானதே இதன் விளைவாகவே நாட்டின் பல முக்கியமான அரசியல், சமூக மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆயினும் நாட்டின் தேசிய இனப்பிரச்சினை, சுதந்திரத்திற்கு முன்பிருந்தே பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் தனது அரசியல் இலாபங்கட்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. குறுகிய தேசியவாதமும் இதற்குத் தன்பங்கைச் செலுத்தியது உண்மையே.

இந்த நூற்றண்டின் முற்பகுதியில் முஸ்லீம்கட்கு எதிராகத் தொடுக்கப்பட்ட பொளத்த சிங்கள வன்முறை தந்த எச்சரிக்கை பலராலும் உரியளவு கவனிக்கப்படவில்லை. குறிப்பாகத் தமிழ்த்தேசியத் தலைமைகள் இதைத் தமக்கெதிரான ஒரு எச்சரிக்கையாகவே காணவில்லை. நாட்டின் தேசிய இனங்களுக்கிடையிலான சமத்துவமும் ஒற்றுமையும் சிங்களப்பேரினவாதிகளால் படிப்படியாகக் குலைக்கப்படுவதற்குச் சிறுபான்மைத் தேசியஇனத்தலைவர்கள் சிலரது பேரம் பேசும் அரசியலும் உதவியது.

மலையக மக்கள் 1948ல் குடியுரிமையை வஞ்சனையால் இழந்தது போன்ற ஒரு அவமானமான நிகழ்வு 1980கள் வரை இந்த மண்ணில் நிகழவில்லை. இதையொட்டிய காலம்முதல் நிகழ்ந்து வந்த திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ், முஸ்லீம் மக்களது பாரம்பரிய பிரதேங்களில் அவர்களைச் சிறுபான்மை ஆக்கும் முயற்சி இன்னமும் தொடர்கிறது . ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கும் செயல், நாட்டில் இரண்டாவது முக்கிய மொழியின் உரிமையை மறுக்கும் விதமாக நடைபெற்றதால் எல்லாருமே வரவேற்றிருக்க வேண்டிய ஒரு ஆட்சி மொழி மாற்றம் இந்த நாட்டின் தேசிய இனங்களிடையில் பகமை உணர்வைத் தூண்டக் காரணமாகியது. இப்பிரச்சினை இரண்டு தேசிய இனங்களதும் தேசியவாதத் தலைமைகளால் தவறாகக் கையாளப்பட்டதன் விளைவாக, இன உறவுகள் மிகவும் சீர்குலைய நேர்ந்தது. ஒடுக்குதலுக்குட்பட்டிருந்த தமிழ்த் தேசிய இனத்தை மேலும் வருத்தும் விதமான 1970ம் ஆண்டுத் தரப்படுத்தல், 1972ம் ஆண்டு வந்த அரசியல்யாப்பு, 1974 தமிராய்சி மாநாட்டு அசம்பாவிதம், தொடர்ந்து நிகழ்த அரசியல் கொலைகளும் அவற்றை காரணம் காட்டி வளர்ந்த அரச அடக்குமுறை நடவடிக்கைகளும், 1958 வன்முறையின் எச்சரிக்கையை மறந்து அரச அனுசரணையுடன் நடந்தேறிய 1977, 1983 வன்முறைகள், 70களில் மலையக த்தின் தமிழ் மக்கள் பலர் இருக்கவும் இடமின்றி அலைய நேர்ந்த அவலம், மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கட்கு எதிராக வளர்ந்து வந்த வன்முறை, இதேகாலகட்டத்தில் 1965ம் ஆண்டின் சிறிமா சாஸ்த்திரி உடன்படிக்கையை நிறைவேற்றும் சாட்டில் மலையக மக்கள் இந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டமை, தென்னிலங்கையில் முஸ்லீங்கள் மீதும் இடைஇடையே கட்டவிழ்க்கப்பட்ட வன்முறை போன்ற பலவும் தேசிய இனஉறவுகளைச் சீர்குலைத்த நிகழ்வுகளில் சில,




பௌத்த சிங்களப் பேரினவாதம் உண்மையிற் சிங்கள மக்களை நேசித்ததா எனில் அதுவும் உண்மையில்லை. சிங்கள பௌத்தம் என்பது ஒரு சிறிய அதிகார வர்க்கம் தனது நலன்ளைப் பேணுவதற்காகவகுத்த ஒரு அதிகாரச் சித்தாந்தமே அல்லாது வேறல்ல. சிங்கள மக்களிற் பெரும்பாலானவர்கள் அவர்களது ஆட்சியில் நன்மை காணவில்லை. 1971 ஏப்ரல் கிளர்ச்சியும் 1987 – 89 காலத்தில் தெற்கில் நிகழ்ந்த மோதலும் ஒரு இலட்சத்தின் பெரும் பங்கென்று கூறக்கூடியளவு சிங்கள இளைஞர்களைப் பலிவாங்கிவிட்டன. சிங்கள வாலிபர்கள் மத்தியில் இன்று வரை தொடரும் அதிருப்திக்கான காரணங்கள் நாட்டின் பொருளாதாரச் சீரழிவால் மேலும் மோசமாகி வருகின்றன. அதே வேளை மாக்ஸியக் சுலோகங்களால் அலங்கரிக்கப்பட்ட சிங்களப் பேரினவாதத்தால் ஈர்க்கப்பட்டச் சிங்கள வாலிபசக்திகள் வீண் அழிவுக்குக் காரணமானதற்கு ஜே.வி.பி தலைமையே முக்கியமான பொறுப்பாளி. இந்தத் தலைமையின் தவறுகளின் விளைவாக நாட்டில் ராணுவத்தின் செல்வாக்கு ஓங்க நேர்ந்ததும் முக்கியமான ஒரு விடயமாகும். இந்த ராணுவ சக்திகளின் வளர்ச்சி தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குதடையாக உள்ள ஒரு முக்கிய காரணியுமாகும்.

பௌத்த சிங்களம் இன்று பேரினவாதத்தால் ஏற்படுத்தப்பட்ட யுத்த நெருக்கடிக்கு நாடு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அவர்களது பார்வையில் இந்தமண் சிங்கள பௌத்தர்கட்கே உரியது. பறங்கியரில் பெரும்பாலானோர் 60களில் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தனர். 70களிலிருந்து மலையகச் தமிழரிற் கணிசமானோர் தமிழகத்திற்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர். இன்னும் பலரை அனுப்பும் முயற்சிகள் தொடர்கின்றன. இனஒடுக்கல் யுத்தம் வடக்குக் கிழக்கின் தமிழர்களின் குறிப்பிடத்தக்க வீதமானோரை நிரந்தரமாகவும் அதிலும் அதிகமானோரைத் தற்காலிகமாகவும் நாட்டைவிட்டு விரட்டியுள்ளது. இது இலங்கையின் பல்லினத் தேசியத் தன்மையை மாற்றப்போவதில்லை. ஆயினும் இனங்களிடையிலான ஒற்றுமையை நீண்ட காலத்



திரு மீளநிலைநிறுத்த இயலாதவாறு இது செய்கிறது என்பது ஒருவருந்தத்தக்க உண்மை. இருந்தும் வடக்கு கிழகில் தமிழர்கட்கெதிரான இன ஒழிப்பு யுத்தம் 1983 முதல் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

தேசிய இனப் பிரச்சினையால் பல நலிவுகள் ஏற்பட்டபோதும், 1947க்கு முன்பிருந்தே தொடுக்கப்பட்ட போராட்டங்கள் மக்களுடைய உரிமைகள் பலவற்றை வென்றெடுக்க வழி கோலின. பொது வேலை நிறுத்தமும் அதை விட முக்கியமாக 1953 ஹர்த்தாலும் உழைக்கும் மக்களது உரிமைகளை வென்றெடுக்க வழி காட்டின. தொழிற்சங்க உரிமைகள், ஜனநாயகச் செயற்பாட்டுக்கான உரிமைகள், சாதியத்திற்கு எதிராகத் தெற்கில் சட்டரீதியான சமாதானப் பாதையிலும் வடக்கில் போராட்ட மூலமும் வெல்லப்பட்ட உரிமைகள் யாவும் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை. பல ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பெண்களது நிலை உயர்வாகத் தெரிந்தாலும் ஆணாதிக்கம் நிலமான்ய சமூகச் சிந்தனையின் ஆதாரத்துடன் இன்னமும் தொடர்கிறது. பெண்ணுரிமை தொடர்பாகவும் நாட்டில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன எனினும், செய்ய வேண்டியது இன்னும் அதிகம். 1957ல் கட்டுநாயக விமானத்தளமும் திருகோணமலை கடற்படைத் தளமும் பிரித்தானியரிடமிருந்து மீட்கப்பட்டதும் துறைமுகத் தேசியமயமும் 1962ல் எண்ணெய்க் கம்பனிகளது தெசியமயமும் தேசிய முதலாளித்துவ ஆட்சியின் கீழ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சில 1956 முதல் 1977 வரை நாட்டின் அயலுறவுகளில் அணிசேராக் கொள்கை சர்வதேச அரங்கில் இந்தச் சிறிய நாட்டுக்கு பெற்றுத் தந்த முக்கியத்துவம் பெரியது. இக்கால இடைவெளியில் பல குறைபாடுகளுடனும், ஏதோ ஒரு வகையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கை சுயசார்பை நோக்கி நகர்ந்தது. அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களிடம் இல்லாத நிலையில் தேசிய முதலாளித்துவமே வழிடத்திய ஒரு ஆட்சியிடமிருந்து பொருளாதாரத் தன்னிறைவுக்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியை மட்டுமே எதிர்பார்க்க முடியும் நாட்டின் பொருளாதார நெருக்கடியை நோக்கும் போது, அந்தத் தலைமை, ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்யவே முனைவது இயல்பானது. இந்த நிலை ஏற்பட்ட சில காலத்திலேயே நாட்டின் யூ.என்.பி அதிகாரத்திற்கு வந்து நாட்டைப் பூரணமாகவே அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கும் பன்னாட்டுக் கம்பனிகட்கும் அடகு வைக்க முற்பட்டது. இந்த ஆட்சியின் கீழ் இந்த நூற்றாண்டின் நாடுக் கூற்றில் வென்றெடுக்கப்பட்ட மக்கள் உரிமைகள் பல, ஒன்றொன்றாகப் பறிக்கப்பட்டன. எந்த விதமான அயல் ஆதிக்கத்திற்கெதிரான நடவாடிக்கைகள் நாட்டின் நலன் கருதி அன்று எடுக்கப்பட்டனவோ அவை யாவுமே மறுதலிக்கப்பட்டன. மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட இலவசக்கல்வி முறையும் பொதுசுகாதார வசதிகளும் இலவச மருத்துவமும் பிற சலுகைகளும் கொஞ்சம்கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு வந்தன. சுதந்திர வாத்தக வலயங்கள் நாட்டின் தொளிலாளர் களைக் குடூரமாகச் சுரண்ட வழி ஏற்பட்டது.. உல்லாசப் பயணிகள் என்ற பேரில் நாட்டைக் சீரழிக்கும் கும்பல்கள் வந்து கொடிய நோய்களையும் தீய சமூகப் பழக்கங்களையும் போதைப்பொருள் நுகர்வையும் பரப்பின. நாட்டின் கடன் சுமை ஏறியபடியே இருந்தது நாட்டின் பொருளாதாரம் நுகர்வுக்கலாசசாரத்திற்கு பலியாகியது. உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கத் தொடங்கின. அதையெல்லாம் சாத்தியமாக்குவதற்காக அரசு தனது அடக்குமுறையை மேலும்



இறுக்கமாக்கியது. மக்களால் இவற்றை மேலும் தாங்க இயலாத சூழ்நிலையிலும் கூட யூ.என்.பி சர்வாதிகாரம் தொடர்ந்தும் அடக்குமுறை மூலம் மனித உரிமைகளை மறுத்தது.

1992ல் சனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்பட முன்னமே ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகட்குமான வெகுஜனப் பிரசாரம் சமுதாயத்தின் கீழ் மட்டங்களில் வேர் கொண்டது. வடக்கிலும் கிழக்கிலும் நடக்கும் யுத்தத்தின் விளைவாக தென்னிலங்கையில் ஏற்பட்ட சமூக, பொருளாதார நெருக்கடியின் காரணமாகத் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான சமாதானத் தீர்வுக்கான வேட்கை அதிகமாயிற்று. இவற்றின் விளைவாகவே மக்கள் முன்னணி அரசாங்கம், 17 வருடகால சர்வாதிகார ஆட்சியை முறியடித்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஆயினும் கடந்த மூன்று ஆண்டுகால ஆட்சியின் போது தனது தேர்தல் வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் மீறியுள்ளது மட்டுமன்றி, யூ.என்.பியின் பொருளாதாரச் கொள்கையை மேலும் மும்மரமாக நடைமுறைப்படுத்தி நாட்டின் அரச கூட்டுத்தாபனங்கள் யாவற்றையும் தோட்ட, விவசாய நிலங்களையும் பன்னாட்டு கம்பனிகட்கு தாரைவாக்க மும்முரமாக முயல்கிறது. அனைத்தையும் விட முக்கியமாக யூ.என்.பி ஆட்சி தொடக்கிவைத்த இன ஒழிப்புப்போரை இந்த அரசாங்கம் இன்னும் மும்மரமாக நடத்தி வருகிறது.

சிங்கள பௌத்த வியாபாரத்தை நடத்துகிற அரசியல் சக்திகள் என்றுமே உண்மையில் சிங்கள மொழியினது வளர்ச்சியையோ பௌத்த சமய விழுமியங்களைப் பேணுவதையோ சிங்கள பௌத்தக் கலாசாரத்தை வெளியிலிருந்து வரும் தீய சக்திகளிடமிருந்து காக்கவோ முயல்கிறார்களா என்றால் இல்லை என்றே



கூறவேண்டும். இன்று நாட்டிலே ஆங்கிலமே ஆதிக்கமொழியாகி விட்டது. தாய் மொழிக் கல்வி 1977க்குப் பின்பு தேக்கமடைந்தள்ளது என்பதில் இரகசியமில்லை. பௌத்த மதமும் சிங்கள பௌத்தக் கலாசாரமும் வேறும் சடங்குகளாகவே பேணப்படுகின்றன. நடைமுறையில் நுகர்வுப் பொருனாதார விழுமியங்களும் வணிக கலாசாரமும் நாட்டை வெகு துரிதமாக ஊடுருவுகின்றன. சிங்கள பௌத்தம் என்பது சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு எதிரான ஒடுக்குதலுக்கான ஒரு முகமூடியாக உள்ளளவுக்கு ஏகாதிபத்திய விரோதத்தையும் தேசிய பொருளாதாரத்தையும் முன்நிறுத்தும் ஒரு கோட்பாடக இல்லை.

ஒட்டுமொத்தாமாக சொன்னால், 1948ல் வந்த சுதந்திரம் எசமானர்களது ஏவலர்களது அதிகாரமாகவே 1956 வரை தொடர்ந்தது. 1956ல் ஏற்பட்ட சில மாற்றங்கள் நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியம் போன்றவற்றை உறுதி செய்யும் சில நடவடிக்கைகளை இயலுமாக்கியது. இவற்றை முழுமைப்படுத்தும் ஆற்றலோ இலங்கையை பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாக ஏற்றுத் தேசிய இனங்களிடையே ஐக்கியத்தைப் பேணி நாட்டின் பொருளாதாரத்தை சுயசார்பின் அடிப்படையில் கட்டியெழுப்பும் வல்லமையோ தேசிய முதலாளித்துவத்துக்கு இல்லாமல் போனது. அதன் இயலாமையும், பாராளுமன்ற இடதுசாரி அரசியலின் சந்தர்ப்பவாதமும், சர்வதேச அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளது தற்காலிகமான நலிவும் 1977ல் யூ.என்.பியை மிளவும் ஆட்சியில் அமர்த்தி நாட்டை வலதுசாரி சர்வாதிகார ஆட்சி ஒன்று அமைவதை இயலுமாக்கின. இதன் விளைவாக மக்கள் போராடி வென்ற பல உரிமைகள் இழக்கப்பட்டன. 1994ல் யூ.என்.பி வீழ்த்தப்பட்டமை 1956க்குப் பின்பு மக்களுக்குக்கிடைத்த மகத்தான வெற்றி. ஆயினும் அந்த வெற்றி கடந்த பதினேழுவருடங்களில் நிகழ்ந்த சீரழிவை நிவர்த்தி செய்யும் என்று மக்கள் எதிர்பார்த்ததைப் புதிய ஆட்சி கனவாக்கி விட்டது.

இந்த 50 ஆண்டுகளில் பின்பும் மக்களுக்குத் தங்களைத் தாமே ஆளும் சுதந்திரம் இன்னும் இல்லை. மக்களைச் சுரண்டும் சக்திகட்கு, முக்கியமாகப் பன்னாட்டுக் கம்பெனிகட்கு, இந்த

—— தொடர்ச்சி 12 பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# தந்தையும் மைந்தரும் (4)

## 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு'

1955ல் சிங்களத்தை அரச கருமமொழியாக்குவது பற்றித் தென்னிலங்கையில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இதுபற்றிய ஆலோனைகள் யூ.என்.பி ஆட்சியாளர்கள் மத்தியிலிருந்தும் வெளிப்பட்டதையடுத்து அரசாங்கத்தில் கூட்டாளியாக இருந்த ஜி.ஜி.பொன்னம்பலம் தனது யாழ்ப்பாண அரசியல் ராச்சியத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து முன்குறிப்பிட்ட விதமான அதிரடி நடவடிக்கைகை ஒன்றில் இறங்கினார். பிரதமர் ஜோன் கொத்தலாவல்வை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து சென்று ஆங்கிலத்தின் இடத்தில் தமிழும் சிங்களமும் சம அந்தஸ்துடைய ஆட்சிமொழிகளாகும் என்று பொதுக்கூட்டத்தில் அறிவித்தல் செய்தார். இது அவரது அரசியல் சாணக்கியத்தை வடக்கின் தமிழ் வாக்காளர்கள் மெச்சும்படி செய்தது ஆயினும் வெகு விரைவிலேயே அவர் விரும்பியதற்கு எதிரான விளைவுகள் தெற்கில் ஏற்பட்டன.

கொத்தலாவல தெரிவித்தற்கு நேர் எதிரான கருத்துக்கள் யூ.என்.பி. முக்கியஸ்தர்களால் முன்வைக்கப்பட்டன. ஜே.ஆர். ஜயவர்த்தன சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்பதை வெகுவாக வலியுறுத்தினார். திரி சிங்கள பெரமுன என்ற பேரிலான ஒரு அமைப்பு ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் தலைமையில் அப்போது இயங்கியவந்தது. இலங்கையைச் சிங்களவர்களது நாடகவே கருதிய இந்த அமைப்பு பற்றி இடதுசாரிகள் பாரளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தனர் (1955 ஒக்டோபரில் என் .எம். பெரெரா பாரளுமன்றத்தில் மொழிக்கொள்கை தொடர்பாகப் பேசியவை 'சாம்ராஜயத்திற்கு எதிரான உதைகள்' என்ற தலைப்பிலான நூலில் லங்கா சமசமாஜச் கட்சியால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன).

யூ.என்.பியின் சிங்க இனவாத அரசியலின்முன் கொத்தலாவலவின் வாக்குறுதியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தனது வாக்குறுதியைக் காப்பாற்றுவதன் அரசியல் முக்கியத்துவத்தை சிங்கள தமிழ் மொழிகளைப் பேசுவோரது இன ஐக்கியம் என்ற அடிப்படையில் விளக்கி அதற்காகப் போராடும் அக்கறை கொத்தலாவலவுக்கு இருக்க நியாயம் இல்லை. எனவே களனி மாநாட்டில் "சிங்களம் மட்டுமே" கொள்கை ஜயவர்த்தனவால் முன்மொழியப்பட்டு எளிதாகவே ஏக்கப்பட்டது இதன் பின்பும் கொத்தலாவல தலைமையிலேயே யூ.என்.பி 1956 தேர்தலைச் சந்தித்து முக்கியமானது

1956 தேர்தல் பற்றித் தமிழரசுக்கட்சி தமிழ் காங்கிரஸ் ஆகிய தமிழ்த் தேசிய வாதக் கட்சிகள் இரண்டும் தமிழ்மக்கள் முன்வைத்த படிமங்கள் அரசகருமமொழிப் பிரச்சினையை முதன்மைப்படுத்துவனவாகவே அமைந்துதன. அந்த நிலை, இன்றுவரை தமிழ்த் தேசியவாதிகளால் பேணப்பட்டுவருகிறது. எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க 1956 தேர்தலில் 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவாதகக் கூறிக் செய்த தேர்தல் பிரசாரத்தை வைத்து அவரையே சிங்கள இனவாதத்தின் பிரதான பிரமுகராகக் காட்டுவதில் இரண்டு தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் செயற்பட்டன.

சிங்களம் மட்டுமே கொள்கையின் கர்த்தாவாகப் பிரித்தானிய ஆட்சிக்காலச் சட்டசபையிலேயே சிங்களம் மட்டும் பிரேரணையை முன்வைத்தவர் ஜே. ஆர். ஜயவர்த்தன என்ற உண்மை 1980 களில் தான் தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் வாதிகளால் பரவலாகத் தமிழ் மக்களிடம் எடுத்துக்கூறப்பட்டது. யூ. என். பிக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை என்று தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் கூறினால் அது அதிக பட்சம் உண்மையில் யூ. என். பியே மேல் என்பதே அவர்களது உள்ளக்கிடக்கை. இது பற்றித் தமிழ்க் கங்கிரஸ் தலைமை தெளிவாகவே இருந்தது. தமிழரசுக் கட்சி இதை அப்படியே வெளியே சொல்லத் தயங்கியது. ஆயினும் பின்னைய அரசியல் நிகழ்வுகள் அதை எங்கே இட்டுச் சென்றன என்பது வேறு கதை.



1956ல் பண்டாரநாயக்கவின் தேர்தல் பிரசாரத்தளம் வெறுமனே சிங்கள மொழிப் பிரச்சனை தான் என்று சொல்வது போல அரசியல் வெகுளித்தனம் அதிகம் இல்லை.1953ஹர்த்தலின் போது வெளிப்பட்ட வெகுஜன உணர்வுகளின் அறுவடை பண்டாரநாயக்கவால் பெறப்பட்டது என்பது அதிகம் பொருந்தும் ஆங்கிலம் படித்த உயர், நடுத்தர வகுப்பினரதும் நிலவுடமைக்காரக் குடும்பங்களதும் ஆதிக்கத்திற்கு எதிரா மக்கள் மத்தியில் இருந்த பகை உணர்வை கிராமிய மட்டத்தில் அவர் நன்றாகப் பயன்படுத்தினார். யூ.என்.பி ஆட்சியை முறியடிக்கும் நோக்கில்அவருடன் பல் வேறு சக்திகளும் இணைந்தன. இதில் ஈழத்தில் த்ரொத்ஸ்கியத்தின் தந்தை எனக் கருதப்பட்ட பிலிப் குணவர்த்தனவின் புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி (வி. எல். எஸ். பி.) முதல் சிங்கள இனவாதியான கே. எம்.பி.ராஜரத்னவின் ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்ன ணியும்) வரையிலானவர்கள் இணைந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக்கட்சியும் இந்த மக்கள் ஜக்கிய முன்னணி என்ற கூட்டணியுடன் சில ொதகுதிகளில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டுக்கு வந்தன.

பண்டாரநாயக்கவின் தலைமைக்கான அரசியல் ஆதரவு சிங்கள மக்களிடையே இருந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து கிடைத்ததனாலேயே அவரது அரசியல் வேலைத்திட்டத்தில் பல வேறு சமூக பொருளாதார சீர்திருந்த நடவடிக்கைகளும் உள்ளடங்கியிருந்தன. தாய்மொழி மூலமே கல்வி பெற்றவர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் பௌத்த குருமார் போன்றோர் ஆங்கிலக் கல்வி பெற்றோர் மேனாட்டு வைத்திய முறையில் தேர்ந்தோர், கிறிஸ்துவ பாதிரிமார் போன்றவர்கள் ஒத்த நிலைமைக்குத் தம்மை உயர்த்தும் வாய்ப்பபை பண்டாரநாயக அவர்கட்குக்கு காட்டினார். காணியற்ற விவசாயிகள், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் போன்றோர் மத்தியிலும் அவரது தலைமை பற்றிய எதிர்பார்ப்புக்கள் கணிசமாகவே இருந்தன. சிங்களம் மட்டுமே பிரேரணையை யூ.என்.பியின் களனி மாகநாட்டில் முன்வைத்த ஜயவர்தன, களனி தொகுதியில் படுதொல்வியுற்றார் என்பதும் ஒரு முக்கியமான உண்மை.

தமிழரசு கட்சித் தலைமை இவற்றை அறியாத ஒன்றல்ல. ஆயினும் மொழிப்பிரச்சினை தவிர்ந்த எந்தப் பிரச்சினையிலும் கைவைக்க அவர்கள் விரும்பவில்லை. ஏனென்றால் அவை தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தின் வர்க்க நலன்கட்கு மிகவும் எதிரான திசையில் தமிழ்ப்பிரதேசங்களின் அரசியலைத் திசைதிருப்பிவிடும் என அவர்கள் அறிந்தனர்.

1956ல் சிங்களம் மட்டுமே கொள்கையை யூ.என்.பியும் அதனுடன் போட்டியிட்ட ஸ்ரீ.ல.சுக. தலைமையிலான ம.ஐ.முவும் ஏற்றுக் கொண்ட பின்பு, எதிர்பார்த்தபடியே, தமிழ்காங்கிரஸின் அதிபுத்திசாலித் தலைமையின் மீதான நம்பிக்கை தகர்ந்தது அன்று நடுத்தர வர்க்கம் முக்கியமாக யாழ்ப்பாணத்தில்,அரசாங்க உத்தியோகத்தைப் பெரிய அளவில் நம்பியிருந்ததால், சிங்களம் அரசகருமமொழியானால் தமது வேலைவாய்ப்புக்கள் பாதிக்கப்படும் என்று அஞ்சியதில் நியாயம் உண்டு. ஆயினும், இதை மேலும் விஸ்தரித்து, சிங்களம் அரசகருமமொழியானால் தமிழ் மொழி அழிந்து விடும் என்று தமிழரசுக்கட்சி பிரசாரம் செய்தது. வலுவான தமிழ் அரசியற் கட்சிகள் வேரூன்றியிராத கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சியால் இந்தத் தமிழ் இன, மொழி உணர்வு அலையைப் பாவித்து வேகமாக வளர முடிந்தது.

1956 தேர்தலில் தமிழரசுக்கட்சி பெரும் வெற்றி ஈட்டியது. ஆயினும் இந்த வெற்றிக்காக அது கையாண்ட சில உபாயங்கள் பின்னர் அதன் பலவீனமாக மாறித் தமிழ் முஸ்லீம் உறவையும் பாதித்தன 1956ல் ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் வென்றார். ஆயினும் தமிழ்க் கங்கிரஸின் செல்வாக்கு ஒரு அரசியற் கொள்கைசார்ந்த செல்வாக்காக அல்லாமல் தனிமனிதர்களது செல்வாக்கும் தேர்தல் தந்திரோபாயங்களும் சார்ந்த ஒரு செல்வாக்காகவே இருந்தது. இதன் காரணமாகவே பின்னாளில் அகில இலங்கை தமிழ்க் கங்கிரஸ் என்ற பேரைத் தமிழரசுக்கட்சியின் பிரசார ஏடான சுதந்திரன் 'அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ்' என்று ஏளனம் செய்து எழுதிவந்தது தமிழரசுக்கட்சியால் தமிழ்க் காங்கிரஸின் இடத்தைப் பறிக்க முடிந்ததேயொழியத் தமிழ் காங்கிரஸின் தலைமைக்கு நேர்மாறான தலைமை யையும் தேசியவாத அரசியலையும் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. மக்களைப்பொறுத்தவரை சில மேலோட்டமான வேறுபாடுகள் காணப்பட்டன. சில நிலைப்பாடுகள், கொள்கையளவிலேனும், தமிழ்த் தேசியவாதத்தை விரிவுபடுத்துவனவாகக் காணப்ப ட்டன. தமிழ்க் காங்கிரஸ் சைவவேளாள உயர் குடி நலன்களை வலியுறுத்தும் ஒரு சக்தியாகத் தென்பட்டது மட்டுமன்றித் தமிழரசுத் தலைமை செல்வநாயகம் ஒரு கிறிஸ்துவர் என்ற தகவலையும் தனது பிரசாரத்தில் பயன்படுத்தத் தவறவில்லை. தமிழ்க்காங்கிரஸில் தமிழ்க் கனவான்களது ஆதிக்கம் இருப்பாதாகக் காணப்பட்ட அதே வேளை, தமிழரசுக் கட்சியில் நடுத்தர வகுப்பின் கீழ் மட்டங்களிலிருந்து வந்தவர்கள் ஓரளவு முக்கியத்ததுவம் பெற்றனர். எல்லாவற் றையும் விட முக்கியமாக யாழ்ப்பாணத்த மிழரையே தளமாகக் கொண்ட தமிழ்த் தேசியவாத அரசியல் அடையாளத்தை (தமிழ்ப்பேசுமக்கள் என்ற அடையாளத்தைப் பயன்படுத்தி) விரிவு செய்ததில் தமிழரசுக்கட்சியின் பங்கு முக்கியமானது இதில் அதன் வெற்றி தோல்விகள் பற்றிப் பின்னர் கவனிப்போம். தமிழ்காங்கிரஸில் இருந்தவர்களை விட அதிகம் தமிழ்ப்பற்றுக் கொண்டவர்கள் தமிழரசுக்கட்சியில் இருந்தவார்கள் என்பதும் ஒரு முக்கியமான விடயம். இதுவும் சிங்கள மொழிச்சட்டத்தையே அடிப்படையான பிரச்சினையாகக் கருதிப் போராடும் நிலைமைக்குக் காரணமாகியது. எனில் மிகையாகாது. இந்தத் தமிழ்ப் பற்றும் தமிழ் இன உணர்வும் அரசியல் நடைமுறையில் எவ்வாறு வெளிப்பட்டன என்பது முக்கியமானது.

சிங்களம் அரசகருமமொழியானால் தமிழ் அழியும், தமிழினம் அழியும் என்று கூறுவதன் மூலம் சிங்கள மொழி மீதான வெறுப்புணர்வு வளர்க்கப்பட்டது. 1957ல் சிங்களம்··· (24மணிநேரத்தை விடக் கொஞ்சம் அதிக காலத்தின் பின்) அரச கரும மொழியாக்கப்பட்ட பின்பு, தமிழரசுக் கட்சியால் தமிழ் மொழியுரிமை பற்றி என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுந்தது. (தமிழரசுக்கட்சியினர் தெளிவான எந்தப் போராட்ட முறைக்கும் ஆயத்தமாக இருக்கவில்லை என்பது 1961ல் சத்தியாக்கிரக முடிவில் உறுதியானது. இது பற்றிக் அக்கட்சியின் மூத்த பாரளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிகவும் மனம் வருந்தி 1961ல் தன் கைப்பட எழுதிய குறிப்பொன்றில் கூறியிருந்தார்).

தமிழ் மொழிக்கும் சம உரிமை என்ற கோரிக்கையை முதன்மைப்படுத்தி எழுந்த அரசியற் பிரசாரம் சிங்களம் அரசகருமமொழியான பின்பு சிங்களத்தின் மீதான வெறுப்பாக வடிவு பெற்றது. தமிழர்

——— தொடர்ச்சி 8ம் பக்கம்

# புதிய வரி யாரை உதைக்கிறது

ஜீ.எஸ்.ரீ (GST) எனப்படும் பொருள்கள் சேவைகள் மீதானவரி இம்மாதம் 1ம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகிறது. இந்த வரியானது இதுவரை காலமும் நடைமுறையில் இருந்தது போலவே மறைமுகமாக பாவனையளர்களிடமிருந்தே அறவிடப்படவுள்ளது. எவ்வாறாயினும் இந்தவரிவிதிப்பு தொடர்பாக வர்த்தகர்களிடமிருந்து அதிருப்தி தெரிவிக்கப் பட்டுவருவதால் அதை விளக்கி வெளியிட ப்பட்ட அறிவுறுத்தலில் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் இந்த வரியை இறுதியில் செலுத்தப்போகிற வர்கள் பாவனையாளர்கள் என்றும் வர்த்தகர்கள் பாவனையாளரிடமிருந்து வரியை அறவிட்டு திணைக்களத்திற்கு செலுத்துவது மட்டுமே அவர்களது கடமையா குமெனவும் தெரிவிக்கப் படுள்ளது.

இந்த வரிவிதிப்பு தொடர்பாக பலவிளக்கங்களும் கலந்துரையாடல்களும் இடம் பெற்று வருகின்றன. இந்த வரிவிதிப்பில் அரசியல் இருப்பதாக ஓர் அரசாங்க ஆதரவாளரும் முக்கிய பிரமுகரும் கலந்துரையாடலின்போது தெரிவித்திருந்தார். இந்த வரிவிதிப்பினை அமுல் நடத்துமாறு (IMF) சர்வதேச நாணய நிதியம் அரசாங்க த்திற்கு நிர்ப்பந்தங் கொடுத்து வருகிறது. இந்தக்கலந் துரையாடலின் போது (IMF) சர்வதேச நாணய நிதியத்தின் பிரமுகர் ஒருவர் மிகவும் உற்சாகத்துடன் பங்கு பற்றிவருகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் இந்த வரிவிதிப்பானது 17% ஆக இருக்கவேண்டுமென வற்புறுத்தி வந்துள்ளது. ஆனாலும் அரசாங்கம் ஆரம்பத்தில் இந்த வரிவிதிப்பு 12.5% ஆக நிர்ணயித்தது. இதனால் கோபங் கொண்ட IMF இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்த சில சலுகைகளை குறைத்துக் கொண்டதாக அறிய வருகிறது இந்த G.S.T. அல்லது V.A.T. எனப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட மறைமுக வரிவிதிப்பானது உலகில் பல்வேறு நாடுகளில் உள்ளது என்பது உண்மைதான் ஆனாலும் அவுஸ்த்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் இந்த வரிவிதிப்பு முறை இல்லையென்பது கவனிக்கப் படவேண்டியதாகும். இந்த வகையான வரிவிதிப்பு தமது வரிக்கொடுப்பனவை அதிகரிக்கும் எனவும் அதனால் வாங்கும் சக்தியை குறைத்துவிடுமெனவும் இவர்கள் கருதுகிறார்கள்.

தற்சமயம் உள்ள விற்பனவு வரிமுறையின் கீழ் உள்நாட்டு உற்பத்தியாளன் ஏற்றுமதிக்காக பொருளை உற்பத்தி செய்யுமிடத்து விற்பனவு வரிசெலுத்த தேவையில்லை. ஆனால் ஒரு உள்நாட்டு உற்பத்தியாளன் ஒரு ஏற்றுமதியாளனுக்கு விற்பனவு செய்யுமிடத்து GST செலுத்த வேண்டும்.அன்னிய முதலிட்டுக் கம்பனியொன்று அதே பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்தால் அந்த GST யை 45 நாட்களுக்குள் கொடுக்கலாம். அதேசமயம் உள்நாட்டு உற்பத்தியாளன் 30 நாட்களுக்குள் செலுத்தவேண்டும். எனவே ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் கம்பனியானது நேரடியாகவே குறிப்பிட்ட பொருளை இறக்குமதிசெய்தால் 45 நாள் சலுகைகிடைக்கும் என்பதால் இந்தக் கம்பனி நேரடியாக இறக்குமதி செய்வதை விரும்பும். உள்நாட்டு உற்பத்தியாளன் ஏற்றுமதிக் கம்பனிக்காரனுக்கு தானும் 45 நாள் சலுகை கொடுக்க முன்வந்தால் தனது பணத்திலே இறைவரித்திணைக்களத்திற்கு GSTயை செலுத்த வேண்டும் அதனால் அவன் மேலதிக செலவுகளை ஏற்கவேண்டிவரும் குறிப்பாக சொல்லப் போனால் உள்நாட்டு உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படும். மேலும் திணைக்களம் கூறுவது போல GSTயில் மீளப்பெற்றுக்கொள்ள வேண்டிவரும். தொகையை நடைமுறையில் சுலபமாக செய்துவிடமுடியாது. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை திணைக்களத்திடமிருந்து மீளப்பெறுவதற்கு பல வருடங்கள் பிடிக்கும் என்பதே நடைமுறையாய் உள்ளது. இந்த GSTயை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தும் போது அன்னிய முதலீட்டுக் கம்பனிகளுக்கு விசேட சலுகைகள் உண்டு 1996 மே 16ம் திகதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஏதாவதின் ஏற்பாட்டில் கம்பனி இறக்குமதி செய்யும் குறிப்பிட்ட பொருள்களுக்கு GSTசெலுத்த தேவை யில்லை.

மேலும் தற்போது ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்துள்ள அன்னிய கம்பனிகளும் இந்தGSTயிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இந்தச் சலுகைகள் உள்நாட்டு உற்பத்தியாளருக்கு வழங்கப்ப வில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு உற்பத்தியாளன் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை IMFன் ஆணைப்படி அன்னியக்கம்பனிகளுக்கு சலுகைகள் வழங்கப் பட்டுள்ளது.

இந்த GST அமுலில் தேசிய நலன் ஏதும் இல்லை. அன்னிய நலன்களே பாதுகாக்கப்படுகிறது. மொத்தத்தில் இந்த வரியானது நாட்டின் சாதாரண மக்களையே உதைக்கப்போகிறது. இந்த வரியை அமுல் நடத்துவதில் IMF கூடிய அக்கறை செலுத்துவ தற்கான காரணம் தெளிவாக விளங்குகிறது. அன்னிய, பல்தேசிய கம்பனிகளுக்கு கூடியசலுகைகளைப் பெற்றுக்கொடுத்து இந்த நாட்டை மேலும் சுரண்டுவதே நோக்கம். உள்நாட்டு உற்பத்திகள் வீழ்ச்சியேற்றபட்டால் நிரந்தரமாகவே பிறநாடுகளுக்கு கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும். அதனால் இலாபம் பெறப் போவது பல்தேசியக்கம்பனிகளும் வளர்ச்சிபெற்ற நாடுகளுமேயாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# உலகப் பிரசித்தி பெற்ற இரண்டு கொலைகாரர்கள்!

தத்தமது நாடுகளின் மக்களது பச்சை இரத்தம் குடித்து பதவிகளைப் பெற்றுக் கொண்ட இரண்டு ராணுவ சர்வாதிகாரிகள் பற்றி அண்மையில் செய்திகளில் பேசப்பட்டது. ஒருவர் இந்தோனேசியாவின் ராணுவ சர்வாதிகாரி சுகார்ட்டோ, அடுத்தவர் சிலி நாட்டின் ராணுவ சர்வாதிகாரி ஒக்ஸ்டோ பினோசெற்.

இந்தோனிசியாவில் அறுபதுகளில் நடுக்கூறிலே இராணுவத் தளபதியாக இருந்த சுகார்ட்டோ இராணுவச் சதி மூலம் ஆட்சிப் பொறுப்பைத் தனது கைகளுக்கு எடுத்துக் கொண்டவன். இந்தோனேசிய நாட்டில் மிகவும் செல்வாக்குடன் ஆட்சி செய்து வந்த தேசியவாதியான சுகார்னோவின் தலைமையில் அமைந்த அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பங்கு கொண்டிருந்தது. மிகவும் பலம் பெற்ற அக்கட்சியின் வழிகாட்டலில் இந்தோனேசியா தேசிய சர்வதேச விவகாரங்களில் மிகுந்த முற்போக்குப் பாத்திரம் வகித்து நின்றது. பொருளதார வளர்ச்சி முன்னோக்கிச் சென்று தேசிய பொருளதாரத்தை வலுப்பெறச் செய்தது. இத்தகைய போக்கு இந்தோனேசியாவின் பிற்போக்கு சக்திகளுக்கும் அவர்களது எசமானர்களான ஏகாதிபத்திய சக்திகளுக்கும் பாரிய கலக்கத்தைக் கொடுத்தன. தொடர்ந்தும் விட்டுவைத்தால் நாடு சோஷலிசத்திற்குள் சென்றுவிடுமோ என அஞ்சி அந்த நிலையை முறியடிக்க சதித்திட்டங்கள் உள்ளும் புறமும் தீட்டப்பட்டன. மாணவர்களை ஏவிவிட்டு தவறாக வழிநடாத்தப்பட்டு வீதியில் இறக்கப்பட்டனர். தொழிலாளர்கள் இச்சதியை அம்பலப்படுத்த முனைந்தனர். சீனர்களுக்கு எதிரான திட்டமிட்டவன் முறைகளும் எதிர்ப்புகளும் செயற்கையாகவே குண்டர்களினால் தொடுக்கப்பட்டன. அதேவேளை இராணுவத்திற்குள் இருந்த முற்போக்கப் பிரிவுகளில் அதிருப்தியும் எதிர்ப்பும் கிளம்பின. உருவாகி வந்த பிற்போக்கு இராணுவச் சதியை முறியடிக்க அவை முனைந்தன. இத்தகைய குழப்ப சூழலைப் பயன் படுத்தி வலதுசாரி இராணுவக் கும்பல் சுகார்ட்டோ தலைமையில் மனித வேட்டையில் இறங்கியது. கம்யூனிஸ்டுக்களையும் அவர்களது ஆதரவான மக்களையும் பச்சைத்தனமாக கொன்று குவிக்கத் தொடங்கினர். ஒரு வாரத்திலேயே ஆறு லட்சம் மக்களை சுகார்ட்டோ தலைமையிலான இராணுவ சர்வாதிகள் வேட்டையாடி முடித்தனர். அத்துடன் தமது ராணுவ ஆட்சியை நிலைப்படுத்தியும் கொண்டனர். கடந்த முப்பத்து மூன்று வருட சுகார்ட்டோவின் இராணுவ ஆட்சியின் கீழ் தேசபக்தர்கள், தேசியவாதிகள், கம்யூனிஸ்டுக்கள் தொழிற்சங்கவாதிகள், முற்போக்குவாதிகள் என்போர் பல லட்சம்பேர் கொலையுண்டனர், காணமல்போயினர், சிறைக்கூடங்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாகி கொல்லப்பட்டனர். இத்தனை அக்கிரமங்கள் இடம் பெற்ற இவ் வளவு காலத்திலும் சரி இன்றும் கூட மனித உரிமைக் காவலன் எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்காவின் கண்களுக்குத் இவை பார்க்கத் தெரியாது போய் விட்டமை தற்செயலானதொன்றல்ல. இத்தகைய ஒரு பயங்கரக்கொலைகரனான சுகார்ட்டோ இன்று படுபாதளத்திற்கு இந்தோனேசியாவை இட்டுச் சென்று நாட்டின் பொருளாதாரத்தையே சூறையாடி மக்களை நடு வீதியில் நிறுத்தி உள்ளான். அவனைப் பாதுகாக்க சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் 4000 கோடி டாலர்களை அள்ளிக் கொடுத்து நிற்கின்றன. அந்த உற்சாகத்தில் ஏழாவது தடவையாகவும் தன்னைத்தானே ஜனாதிபதியாக்கி தனது நெருங்கிய உறவினர்கள் பரிவாரங்களை அமைச்சர்களாக்கியும் உள்ளான்.

ஆனால் இந்தோனேசிய மக்கள் சுகார்ட்டோவின் சர்வாதிகாரத்தை இனிமேலும் தாங்கிக்கொள்ளத் தயாரில்லை என்ற நிலைக்கு வந்துள்ளனர். ஆங்காங்கே மாணவர்கள் தொழிலாளர்கள் மக்கள் வீதியில் இறங்கத் தொடங்கி விட்டனர். விரைவில் இந் நாட்டில் வெகுஜனப் பூகம்ப எழுச்சி எழவே செய்யும். அந்த எழுச்சியால் கொலை வெறி பிடித்த சர்வாதிகாரி சுகார்ட்டோ சுட்டெரிக்ப்படுவது உறுதி என்பதை அந் நாட்டிலிருந்து வரும் செய்திகள் அடையாளம் காட்டத் தொடங்கி உள்ளன.

தென் அமெரிக்க நாடு சிலியில் 1970ல் பாராளுமன்றத்தின் மூலம் பதவிக்கு வந்தவர் அலண்டே ஆவார். ஒரு தேசியவாதி மட்டுமன்றி சோஷலிசத்தில் நம்பிக்கை கொண்டு அவற்றின் நடைமுறைகளைப் பாராளுமன்ற ஆட்சி முறை மூலம் செயல்படுத்தும் திட்டங்களை கொண்டிருந்தார். ஜனாதிபதியானதும் பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகள் வழிநடத்த ஆரம்பித்தார். தேசிய மயத்திட்டங்களையும் தேசிய பொருளாதர அபிவிருத்தியையும் மையமாகக் கொண்ட சிலி தேசத்தை தென்அமெரிக்காவில் முன்னுதாரணமிக்க நாடாக்க உறுதி பூண்டு நின்றார் அலண்டே. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் இதனை எப்படிப் பொறுத்துக் கொள்ளும் ஏற்கனவே கியூபாவை விட்டு வைத்த பாடத்திலிருந்து படித்துக் கொண்ட அமெரிக்கா அவசர அவசரமான சதித்திட்டத்தின் மூலம் அலண்டேயின் சோஷசலிசத்திட்டங்களைக் கொண்ட அரசாங்கத்தை ராணுவச் சதி மூலம் கவிழ்த்துக் கொண்டது. இந்த இராணுவச் சதிக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட இராணுவத் தலைவன் தான் ஒக்ஸ்டோ பினோசெற் ஆவான். சோஷலிசவாதிகள், தேசியவாதிகள் கம்யூனிஸ்டுக்கள், தேசபக்தர்கள் அறிவுஜீவிகள் அனைவரும் பினோசெற் தலைமையில் கொன்று குவிக்கப்பட்டனர். பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டதுடன் மூவாயிரம் பேர் காணாமல் போயினர். ஆயிரக் கணக்கானோர் அயல்நாடுகளுக்குத் தப்பிச்சென்றனர். சோஷலிச ஜனாதிபதி அலண்டே அவர்கள் ஜனாதிபதி மாளிகையில் வைத்தே கொல்லப்பட்டார். சிறைக் கூடங்களில் பதின் ஐயாயிரம் பேர்வரை அடைக்கப்பட்டனர் சிலி நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டு கம்யூனிஸ்டுக்கள் வேட்டையாடப்படனர்.

இத்தகைய சிலி நாட்டின் சர்வாதிகாரம் பற்றியோ அங்கு இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றியோ உலக இரட்சகன் வேடம் தரித்த 'அமெரிக்கா கவலைப்பட்டதே கிடையாது. அன்று கொலைக் களத்தை நாடாத்தி பிணக் குவியல்கள் மீது ஆட்சி செய்து வந்த அச்சர்வாதிகாரி பினோசெற் அண்மையில் தான் இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளான். ஆனால் தற்போது அந் நாட்டின் செனட் சபை ஆயுட்கால உறுப்பினனாக நியமனம் பெற்றும் உள்ளான். இந்த நியமனத்தை எதிர்த்து சிலி நாட்டில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பட்டங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

அறுபதுகளின் பிற் கூறிலே அமெரிக்காவின் வழிகாட்டல் அரவணைப்புடன் நடாத்தப்பட்ட ராணுவச் சதிகள் தென் கொரியா, இந்தோனேசியா, சிலி போன்ற நாடுகளின் தற்காலிக வெற்றிகளை அன்று அடைந்து கொண்டன. ஆனால் கடந்த கால் நூற்றாண்டுகளுக்குமேலான இக் கால கட்டத்தில் இந் நாடுகளில் மக்கள் மிகப் பெரும் பட்டறிவைப்பெற்று இன்று அச் சர்வாதிகார ங்களுக்கு எதிராகக் கிளந்தெழ ஆரம்பித்து விட்டனர். எங்கு ராணுவம் சர்வாதிகாரம் வெற்றி பெற்று விட்டதாக அமெரிக்காவும் அவர்களது அடிவருடிகளும் எக்காளமிட்டு மக்களை அடக்கினார்களோ அங்கிருந்தே மக்கள் எழுச்சியுற ஆரம்பித்து விட்டார்கள். இது வரலாற்றின் தவிர்க்கவியலாத நியதியாகும்.

# நஞ்சு வியாபாரிகள்

பிரித்தாய அமெரிக்க புகையிலைக் கம்பெனி (பி.ஏ.தி) 20 வருடங்கட்கு முன்பு புகையிலையில் நிக்கொட்டினை அதிகப்படுத்தும் முறையில் விவசாய ஆய்வுகளை ஊக்குவித்த் தது எனவும் புகையிலையின் தீய விளைவுகளை கண்டு அறிந்தே அது இவ்வாறு செய்தது எனவும் அண்மையில் ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. இப் புகையிலைக் கம்பெனியின் ஒரே நோக்கம் புகைப்பிடிப்போரை நிக்கொட்டின் பழக்கத்திற்கு நிரந்தர அடிமைகளாக்கிப் புகையிலை வியாபாரத்தை மேலும் வளர்க்கும் என்ற வியாபார இலக்கு மட்டுமே. உலகின் மிகப்பெரிய புகையிலைக் கம்பெனியான பீ.ஏ.தி. மூன்றாம் உலகில் புகைப்படிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு மிகவும் கடுமையாக உழைத்து வருகிறது என்பதும் கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.



# தொண்டமானும் தோசையும்

**தோட்டத் தொழிலாளர்கள் தமது நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கைக்குப் போராடி 105 ரூபா சம்பளத்தை எதிர்பார்க்கும் போது முதலாளிமார் வழங்க உடன்பட்ட 101 ரூபா சம்பளத்தை ஏற்கும் படி வலியுறுத்தியுள்ள தொண்டமான் "தோசை புரட்டும் பெண்ணுக்கு அது கருகும் நேரம் தெரிய வேண்டும்" என்று பொன் மொழி ஒன்றும் உதிர்த்திருக்கிறார். தொழிலாளர்கள் புரட்டி வருகிற தோசைகள் எல்லாம் யாருடைய வயிற்றுக்குள் போகின்றன என்பது தெரிந்தால் அது கருகுவது பற்றிக் கவலைப்படுகிறவர் யாருடைய கூட்டாளி என்றும் தெரியவரும்.**

**தொண்டமானும் அவரது இ.தொ.கா. கூட்டாளிகளும் குடும்பமும் புரட்டின தோசை போன உள்ளூராட்சித் தேர்தலில் கொஞ்சம் கருகித்தான் போனது. மலையக மக்களை மூன்று பரம்பரைகளாக ஏமாற்றி வருகிற கூட்டத்தையும் அவர்கள் தங்கள் வசதிகட்காக யாருக்காவோ புரட்டுகிற தோசைகளையும் சேர்த்துக் கரியாக்கிவிட மலையக மக்கள் ஆயத்தமாகி விட்டார்கள் என்பதைக் கடந்த சில மாதங்களில் மலையக நிகழ்வுகள் காட்டிவிட்டன.**

# சதாமின் விஷக் கிருமிகள்

சதாம் ஹுஸேன் பயங்கரமான விஷக் கிருமி ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் அவற்றை அழிப்பதற்குவசதியாக அவற்றைப் பதுக்கியுள்ள இடங்களைப் பரிசோதனை செய்வதற்காகவே தாங்கள் முயல்வாதாக கூறும் அமெரிக்க அதிகாரபீடமும் அதன் செல்லப் பிராணியான பிரித்தானிய அரசாங்கமும் சதாம் ஹுஸேனிடம் அத்தகைய ஆயுதங்கள் இருப்பதாக எவ்வாறு இவ்வளவு நிச்சயமாக உள்ளன? அவற்றை விருத்தி செய்யும் தொழில் சதாமுக்கு எவ்வாறு கிட்டியது? முதலில் இவற்றை சதாமுக்கு வழங்கியவர் யார்? 1985 முதல் ஈரானுக்கு எதிரான போரில் பயன்படுத்தும் நோக்குடன் சதாமுக்குப் பலவித உயிர்கொல்லி ஆயுதங்கள் அமெரிக்காவும் பிரிட்டனுமே பெரும் அளவில் வழங்கின. இது 1992 வரை (1991 வளைகுடா யுத்தத்தின் பின்பும்) தொடர்ந்தது இந்த உண்மையை முதலில் இவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? பயங்கரமான ஆயுதங்களை வைத்திருக்கும் சதாம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது உண்மை தான். சதாம் போல எத்தனையோ கொலைகாரர்கட்கு அந்த ஆயுதங்களை வழங்கி வருகிற கொலைகாரர்கள் முதலில் கட்டுப்படுத்தப்படாமல் சதாமை மட்டும் கட்டுப்படுத்த முயல்வதில் என்ன பயன் உண்டு?

அமெரிக்காவும் பிரிட்டனும் போடும் இந்த வேஷம் முதலில் கலைக்கப்பட வேண்டும். ஆயினும் அவர்கள் போடுகிற பிச்சையில் பிழைக்கும் பிற மூன்றாமுலக ஆட்சியாளர்கள் துணிவார்களா? கியூபாமீது யுத்தம் தொடுத்த அமெரிக்காவுக்கு ஒரு நீதி சதாமுக்கு இன்னொரு நீதியா? ஈராக் மீது குண்டு வீசி இந்த நச்சு ஆயுதங்களை அழிக்க முடியாது அது சதாமுக்கும் தெரியும், அமெரிக்கப் போர் வெறியர்கட்கும் தெரியும். எனவே, இந்த விளையாட்டு, ஈராக் மீது குண்டு விசினாலும் முடியாது என்பது உறுதி. அமெரிக்காவின் கைப்பாவையாக உள்ள ஐ.நா.சபையின் தடைகளால் அல்லல் படுவது சதாம் அல்ல சாதாரண ஈராக் மக்கள் மட்டுமே. இந்தவிதமான வியாபாரத்தடைகள் எந்த விஷக் கிருமிகளையும் விடக் கொடியவை இதையும் நாம் நினைத்துப் பார்ப்பது நல்லது.

நன்றி - நூலகத்திட்டம்

# கிழக்கு மக்களின் அவல நிலை

இன்றைய வடக்கு கிழக்கு யுத்தத்தில் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய கிழக்கு மாகாணங்கள் அடைந்து வரும் அவலங்களுக்கு அளவே இல்லை எனலாம். கிழக்குமாகாணத்தின் விஷேச சூழ்நிலைகளால் அங்கு யுத்தம் நாளாந்தாம் உக்கிரமாகி வருகின்றது. கிழக்கு மாகாணம் தமிழர்களின் முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற நிலையை படிப்படியாக மாற்றி அவர்களை சிறுபான்மையினராக்கி சிதறடித்துக் கொள்வதையே பேரினவாத சக்திகள் நீண்டகாலக் குறிக்கோளாக்கி இருந்து வந்துள்ளன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்னும் நச்சுத் தனமான பேரினவாதச் செயல் முறையால் அம்பாறை மாவட்ட தமிழர் திட்டமிட்டே சிறுபான்மையாக்கப்பட்டனர். அவர்களது பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டன. அடிக்கடி இரகசியமானதும் பரகசியமனாதுமான இனவன் செயல்கள் மூலம் இடம் பெயர வைக்கப்பட்டனர். காணிகள் கடைகள் விவசாயநிலங்கள் பறிக்கப்பட்டன. ஆயுதப்படைகளும் அரசாங்க அதிகாரிகளும் இவற்றுக்குத் துணை போயினர். பல நூற்றாண்டுகளாக கிழக்கிலே பாரம்பரிய பிரதேச பொருளாதார இன கலாச்சாரங்களுடன் வாழ்ந்த வந்த தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் இருப்பையும் ஒரு பொருட்டாகப் பேரினவாதிகள் கவனத்தில் கொள்ளவில்லை. அதே போன்று முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் கவனத்தில் கொள்ளவில்லை. அதேவேளை திட்டமிட்ட உள்நோக்கங்களோடு குடியேற்றப்பட்ட சிங்கள் மக்களின் நலன்கள் இருப்பு எதிர்காலம் பற்றி மட்டுமே ஆட்சியாளர்கள் அதிக கரிசனை காட்டிவந்திருக்கிறார்கள். அவர்களை மனதில் வைத்துக் கொண்டே இன்னும் அரசியல் தீர்வில் வடக்கு கிழக்கு இணைப்பை மறுத்து கிழக்கு மூவின மக்களுக்குரிய பிரதேசம் என வலியுறுத்துகின்றனர். எதிர்காலத்தில் வடக்கைக்கூட இரண்டாகப் பிரித்து வன்னிப் பிரதேசத்தை மூவினமக்களுக்குரிய பிரதேசம் எனக் கூறினாலும் ஆச்சரியம் கொள்ளத் தேவை இல்லை.

கிழக்கு மாகாணம் நில நீர் வளம் மிக்க பிரதேசமும் புவியியல் அடிப்படையில் சிங்களப் பிரதேசங்களுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டதுமாகும். தமிழ் பிரதேசம் ஒன்றில் சிங்கள மக்கள் வாழக் கூடாது என்பதோ அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படக்கூடாது என்பதோ எவருடைய கொள்கையாகவும் இருக்க முடியாது. ஆனால் தமிழ்ப் பாரம்பரிய பிரதேசத்தை பேரினவாத அடிப்படையில் படிப்படியாகக் கபளீகரம் செய்யும் செயலை சிங்கள தமிழ் முஸ்லீம் ஐக்கியம் என எவ்வகையிலும் கொள்ள வியலாது. கடந்த ஐந்து தசாப்தங்களுக்குமேல் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற ஒவ்வொரு திட்மிட்ட செயற்பாடும் பேரினவாத உள்நோக்கங்களின் அடிப்படையிலேயே நடைபெற்று வந்துள்ளன. இது தொடரப்படக் கூடாது என்பதே நியாய சிந்தை படைத்தவர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் கபளீகர நோக்கில் செயல்படும் சிங்கள நிலநீர் வியாபார அபகரிப்பாளர்களான பெரும் பேரினவாத சக்திகள் தமது சிங்கள ஆதிக்கத்தை கிழக்கில் நிறுவி தமிழர் முஸ்லீம்மக்களை மேலும் சிறுபான்மையினராக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்கே முயன்று வருகிறார்கள். இதற்காக முழு அரச நிர்வாகமும் அரச யந்திரமான ஆயுதப்படைகளும் செயலாற்றுகின்றன. மிகச்சிறந்த உதாரணம் திருகோணமலையில் புதிய சந்தைக் கட்டிடம் திறக்கப்படுவதை உயர் இராணுவ அதிகாரி தலைமிட்டு தடுத்து வைத்திருப்பதாகும். அதே போன்று மட்டக்களப்பில் இறுதித் தீர்மானம் செய்வோர் சிங்கள உயர் அதிகாரிகள் இராணுவத்தினராகவே உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் புவியியல் தன்மைகாரணமாகவும் நீண்டகால பேரினவாத ஒடுக்குமுறையினாலும் இன்றைய தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் புலிகள் இயக்கம் கொரில்லாத் தாக்குதலில் நிலைத்து நின்று பிடிப்பதற்கு அப்பிரதேசம் வாய்ப்பானதொன்றாக அமைந்துள்ளது. பின்தங்கிய கிராமங்களும் காடும் காடுகள் சார்ந்த பகுதிகளும் கிழக்கின் விஷேச தன்மைகளாகும். மறைந்திருந்து தாக்கவும், தாக்கி அழித்து விட்டு அதிக இழப்பின்றி காட்டுப் பிரதேசங்களுக்கு தப்பிச் செல்லும் கொரில்லா யுத்தத்திற்கு உகப்பான இடமாகவும் கிழக்கு இருந்து வருகின்றது. இதனை மிகச் சிறப்பாகப் புலிகள் இயக்கம் பயன் படுத்தி தமது இராணுவ நிலைகளையும் தந்திரோபாயங்களையும் வகுத்து செயல் பட்டு வருகின்றனர். அவர்களது அரசியல் தந்திரோபாயங்கள் மிகமிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வரும் அதேவேளை யுத்த செயற்பாடுகளிலும் கொரில்லா வியூக அமைப்பிலும் மிகஉயர்ந்த நிலையில் இருந்து வருவதை எவரும் மறுத்து விடஇயலாது. இதற்கு கிழக்கு மாகாணம் கைகொடுத்து நிற்கிறது.

இத்தகைய கொரில்லாப் போராட்டத்தின் வலுவான தாக்குதல்களுக்கு முகம் கொடுப்பதில் ராணுவமும் பொலீசும் கடுமையான சவால்களை எதிர்நோக்கி உள்ளனர். அவர்கள் புலிகளையும் மக்களையும் இனங்கான முடியாது திண்டாடுகிறார்கள். அதனால் மக்கள் மீதான தாக்குதல்களை ராணுவத்தினர் அதிரடிப் பொலிசார் நடாத்தி வருவதுடன் செயல்படுத்துவதற்கு சிரமமான கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுமாறு மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். புலிகளின் போராட்டத்தை முறியடிப்பதற்கு கையாளப்படும் மற்றொரு தந்திரோபாயமாக தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் முரண்பாடுகள் திட்டமிட்டு வளர்க்கப்படுவதாகும். ஒர் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் மகன் கொல்லப் பட்டால் அல்லாது ஒரு சிங்கள பொலீஸ்காரர் கொல்லப்பட்டால் அதற்குப் பழிவாங்கும் படலம் கிழக்கில் இன்றைய சாதாரண நடைமுறையாகியுள்ளது. இச்சந்தர்ப்பங்களில் ஒன்றுமறியாத சாதாரண அப்பாவியான தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் அவர்களது வீடுகள் உடமைகள் அழிக்கப்படுகின்றன. இடம் பெயரவைக்கப்படுகின்றனர்.

வடக்குடன் ஒப்பிடும் போது கிழக்கு மக்கள் பொருளாதார கல்வித்துறைகளில் பின்தங்கிய மக்களாவர். அவர்களது பொருளாதாரம் விவசாயத்தோடும் மீன் பிடியோடும் இணைந்த ஒன்றாகும். ஆனால் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இடம் பெற்றுவரும் யுத்தம் அத்தகைய விவசாய மீன்பிடிப் பொருளாதாரத்தை சீர்குலைத்து சிதறடித்து விட்டது. இன்று இராணுவத் தீர்மானத்தின் படியே விவசாயமும் மீன்பிடியும் நடாத்த வேண்டியுள்ளது. ராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம் அல்லாத பிரதேசம் என இருந்து வருகின்றன. அப்படியான சூழலில் புலிகள் இயக்கம் தமது நிர்வாகத்தை நடாத்தி வருவதையும் காண முடியும்.

—— தொடர்ச்சி 11ம் பக்கம்



## மகனே..........!

தரித்திரம் பிடித்த யுத்தம்
இன்னும் நின்றபாடில்லை
எங்கள் பங்களிப்பையும்
கடமையையும்
நாங்கள் செய்யாததால்
இந்த தரித்திரம் பிடித்த யுத்தம்
இன்னும் நின்றபாடில்லை

நீ பிறக்கும் காலத்தில்
வடக்கே............
உன் வீட்டின் மீதும்
குண்டுகள் விழுந்தனவாம்
வெடி குண்டுகளின்
நச்சு வாயுவை
நிரந்தரமாய் உள்வாங்கியே
நீ பிறந்திருக்கின்றாய்

உன்னைப் போன்றே
இரத்தப் புற்று நோய்க்கு
பலியாகும்
பிஞ்சுகளின் எண்ணிக்கை
அதிகரித்தே வருகிறதாம்
யுத்தால்
சூழல் மாசடைவதும்
போசாக்கின்மையம்
அதற்கு காரணங்களாம்.

உன்னைக் காப்பாற்ற
உனது தந்தையின்
நண்பர்கள்
மிகவும் சிரமப்பட்டே
நிதியை சேர்த்தனராம்
உன்னைப் போன்ற
பிஞ்சுகளையும்
அழிக்கும் யுத்தம்
மீண்டும் தொடங்கியதால்
உன் கொடிய நோய்க்கு
சிகிச்சை அளிக்க
அரச நிதியத்திலிருந்து
கோரிய உதவியையும்
வேண்டாம் என்றாராம்
உன் தந்தை!

உற்றார் உறவினருடன்
உனது கிராமத்தில்
உனக்கு விடைகொடுக்க
நாட்டின்
நிலமை இருந்திருப்பின்
உன் இழப்பை ஓரளவாவது
உன் வீட்டார்
ஏற்றிருப்பர்
மன்னித்து விடு மகனே !
அந்த நிலையை
ஏற்படுத்த எங்களால்
முடியவில்லை

எமது சபதத்தை
ஏற்றுக் கொள்
தரித்திரம் பிடித்த
இந்த யுத்தத்தை
தடுத்து நிறுத்த
உன் தந்தையும்
நாமும் சேர்ந்து
வல்லமையை
வளர்த்துக் கொள்வோம்!

(F). பிரடி

"சந்தேசய" சிங்களப் பத்திரிகையில்
செல்வன் செ. மணியதாஸின் மரணம் பற்றி சிங்கள நண்பர்
பிரடிகமகே எழுதிய கவிதையின் தமிழாக்கம்.

## விழித்தெழுக!

எங்கே மனம் அச்சமின்றி விளங்குகிறதோ
எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ
எங்கே அறிவுக்குத் தளையில்லையோ
எங்கே உலகம் குறுகிய உள்நாட்டுச்சுவர்களால்
சிறுசிறு துண்டாக உடைபடாது இருக்கின்றதோ
எங்கே வாய்ச் சொற்கள்
உண்மையின் அடித்தளத்திலிருந்து வருகின்றனவோ
எங்கே செம்மை நிறைவை நோக்கி தளராத முயற்சி
தன்கைகளை நீட்டுகிறதோ
எங்கே அறிவெனும் தெளிநீர் ஓடை
உயிரற்ற பழக்கமென்னும் பழங்காட்டுப்
பாலை மணலில் போய்ச் சுவடிடவில்லையோ
எங்கே எண்ணமும் செயலும்
மென்மேலும் பரந்து விரியும் வண்ணம்
என் மனதை நீ இட்டுச் செல்கிறாயோ
அந்த சுதந்திர வான் வீட்டில்
என் தந்தையே!
எனது நாடு விழித்தெழுவதாக!

-ரவீந்திரநாத் தாகூர்

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கில் வலிமை காட்டிநிற்கும் சாதியம்

வடக்கு கிழக்கிலே எத்தனை வித அழிவுகள் இழப்புக்கள் துயரங்கள். அத்தனை உச்சங்களைத்தொட்டு நின்ற போதிலும் தம்மிடையே படிந்துபோன பழமைவாதச் சிந்தனைகளையும் நடைமுறைகயைளையும் சிறு அளவில் தானும் கைவிடத் தயாராக இல்லாத ஒரு பிற்போக்கு கூட்டத்தினர் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இருந்து வருகின்றனர். சாதியம் பெண்ணியம், பிரதேசவாதம் போன்றவற்றை பாதுகாத்து முன்னெடுப்பதில் இவர்கள் முனைப்புக் காட்டி நிற்கின்றனர். குறிப்பாக இலங்கை முழுவதிலும் வலுவுடையதாகப் பேணப்பட்டு வரும் சாதியமும்– தீண்டாமையும் வடக்கிலே மூர்க்கமாக இருந்து வந்தது. சைவத்தையும் தமிழையும் பேணுவது வளர்ப்பது என்ற பெயரிலேயே சாதியமும் தீண்டாமையும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் சாதியத்திற்கு ஆட்படுத்தப்பட்ட அடிநிலை மக்களான தாழ்த்தப்பட்ட மக்கள் என்போர் காலத்திற்குக் காலம் போராடி வந்தனர். தம்மீது திணிக்கப்பட்ட சாதிய–தீண்டாமை நுகத்தடியைத் தூக்கி எறிய அதிக விலைகள் பலகொடுத்த போராட்டங்களை நடாத்தினர்.

இப்போராட்டங்களின் மிக உச்ச காலகட்டமே 1966 – 71 காலப்பகுதியாகும். வர்க்கப் போராட்ட கண்ணோட்டத்தில் தெளிவான வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட பரந்த வெகுஜனப் போராட்டங்கள் சாதியத்தை உலுக்கிய வரலாற்று நிகழ்வாகியது. அக்காலத்தில் மாக்சிச லெனிச வாதிகளின் வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் வீறு பெற்று எழுந்த போராட்டங்கள் சாதியத்தின் விளைவான தீண்டமைக் கொடுமைகளைத் தகர்த்து எறிந்தது. தீண்டாமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஏனைய முனைகளிலே முன்னேறிச் சென்று தொழிலாளர், விவசாயிகள் போராட்டங்களுடனும் அமெரிக்க எதிர்ப்பு இயக்கங்களுடனும் கைகோர்த்துச் சென்றன. ஒன்றை மற்றொன்று ஆதரித்து முன்னேறிய போக்கு காணப்பட்டது. இத்தகைய நிலை வடக்கு கிழக்கில் ஒரு புதிய வெகுஜன எழுச்சிக்கான சூழல் கருவைச் சிறு அளவிலே கட்ட ஆரம்பித்தது. ஆனால் அக்கரு திட்டமிட்டவகையில் பல முனைகளிலும் பல்வேறு சக்திகளாலும் சிதைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இன விடுதலைப் போராட்டம் என்பது முனைப்புடன் முன்தள்ளப்பட்டது.

இன ஒடுக்குமுறைக்கு எதிராக வளர்ச்சி பெற்ற இன விடுதலைப் போராட்டம் எவ்வகையிலும் தவறான ஒன்றல்ல. அது காலத்தின் தேவையாக இருந்தது. ஆனால் அக் காலத்தின் தேவையை நிறைவு செய்யவந்த தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகளும் பின் வந்த ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களும் சாதியத்திற்கும்– தீண்டமைக்கும் எதிரான நிலைப்பாட்டில் தெளிவையோ அன்றி துர நோக்கிலான நடைமுறை செயல்பாட்டினையோ கொண்டிருக்கவில்லை. பாராளுமன்றத் தலைமையானது தமது வாக்கு வங்கியை நிலைப்படுத்தவதற்கு ஏற்றவிதமாக நடந்து கொண்டது. சாதியத்தை– தீண்டமையைக்க ண்டும் காணாதது போன்றும், நொந்தும் நோகாதவாறும் நடந்து கொண்டார்கள். இத்தகைய போக்கு சாதியத்தை உள்ளிடையாக வலுவடையச்செய்ததே அன்றி அதனை முறியடிக்க முடியவில்லை. அதே போன்று ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களிலும் இவை பற்றிய தெளிவோ கொள்கையோ இருக்க வில்லை. இயக்கங்களில் இணையும் இளைஞர்கள் மத்தியில் சாதிப்பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறி கொண்ட இத் தலைமைகள் சாதியத்தின் வரலாற்று ரீதியான இருப்பை இனம் காணமறுத்து மிக இலகுவாகவே அதனைத் தட்டிக் கழித்தனர். அத்தகைய இயக்கங்களில் வெளிப்படையாகச் சாதி அணுகுமுறை பார்க்கப்பட்டது என்று கூறமுடியாது விட்டாலும் மேல் மட்டம் முதல் அடிநிலைப் போராளிகள் வரையில் உள்ளார்ந்தமாகவும் மறைமுகமாகவும் சாதியம் தன் இயல்பை வெளிப்படத்தியது என்பதை மறுக்கவியலாது. ஓர் கட்டத்தில் தோற்றம் பெற்ற இளைஞர் இயக்கங்ளை சாதிவாரியாகப் பகுத்த அவை அந்தந்த சாதிக்குரிய இயக்கங்கள் என முத்திரையிட்டுக் காட்டிய சூழல்களும் இருந்தன. இன்னும் அவற்றின் எச்ச சொச்ச அம்சங்கள் நீடிக்கின்றன. இதற்கும் மேலாக இயக்கம் ஏதாவது ஒன்று சாதனை புரிந்தால் அதற்கு உயர்சாதி இளைஞர்களின் வீரதீரத்தைக் காரணம் காட்டுவதும் தோல்வி அல்லது பாதகமான மக்கள் விரோதச் செயல்கள் இடம் பெற்றால் அதற்கு அவ் இயக்கத்திற்குள் இருக்கும் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தான் காரணம் எனப் பிரச்சாரம் செய்வது போன்றவற்றை சமகாலத்திலும் காணமுடியும். இவை அனைத்தும் எதனை காட்டுகிறது என்றால் சாதியத்தின் வலுவையேயாகும். சாதியம் ஒடுக்குமுறைக்கான ஒரு கருத்தியலை தன்னகத்தே கொண்டிருக்கிறது. வர்க்க, பால், இன, நிற ஒடுக்குமுறைகள் போன்றதே சாதிய முறையுமாகும். அதனை உரியவாறு அடையளாம் காண்பதை அண்மைக்கால இன ஒடுக்கு முறையானது மேவி நின்று வறுகிறது. ஆனால் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் எவரும் சாதிய ஒடுக்குமுறையை முக்கியத்துவம் அற்ற ஒன்றாகவே அன்றி இன்று அதற்கெதிரான போராட்டம் தேவையற்றது என்றோ ஒதுக்கிவிட முடியாது. அவ்வாறு அது புறம் தள்ளப்பட்டால் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கு பலவீனம் சேர்த்ததாகவே அமைந்து விடும்.

அன்றைய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் கிடைத்த வெற்றிகளும் சாதியத்தை உலுக்கிய நிகழ்வுகளும் தொடர்ந்து அவற்றில் கிடைத்த அனுபவங்களின் ஊடே முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இடம் பெற்றிருந்தால் வடக்கில் சாதியத்தின் வலு மென் மேலும் குறைக்கப்பட்டு கருத்தியல் சிந்தனா மாற்றங்களுக்கு வழிகள் திறக்கப் படக் கூடி சூழல் வளர்ச்சி பெற்றிருக்கும். அவ்வாறு ஏற்படாத காரணத்தால் இன ஒடுக்குமுறைக் கோரத்தனங்களின் மத்தியிலும் சாதியமும் தீண்டாமையும் தன் முனைப்புக்களை அவ்வப்போது காட்டியே வருகின்றன. 1995ல் வரலாற்றுச் துன்பியல் இடப்பெயர்வை வடக்கில் முழு மக்களும் அனுபவித்த அக்காலப்பகுதியில் கூட சாதியமும் தீண்டாமையும் ஆங்காங்கே முன்னெழுந்து நின்றன என்ற அவமானகரமான நிகழ்வுகள் என்றும் மறைக்கப் படக்கூடியன அல்ல. அன்று இடம் பெயர்ந்த மக்கள் தென்மாரட்சி வடமாரட்சி நோக்கி ஊர்ந்து நகர்ந்த போது தத்தமது உறவினர்கள் நண்பர்கள் என்போரை மட்டும் நாடிச் செல்ல வில்லை. தத்தமது சாதியினர் வாழ்ந்த பகுதிகளைத்தான் நோக்கிச் சென்று ஆறுதலும் அரவணைப்பும் பெற்று வாழவேண்டி இருந்தது. இது வடக்கில் நிலவி வரும் சாதியத்திற்கு உள்ள வலுவான சாட்சியாக அமைந்திருந்தது.

இன்று மீளச் சென்று இயல்பு வாழ்க்கை இன்றி இராணுவ ஆளுகையின் கீழ் வாழும் நிலையிலும் வடக்கில் சாதிய முனைப்புக்கள் முன்னெழுந்து ஆங்காங்கே மோதல்களாக உருவெடுத்து நிற்கின்றது. இது தமிழ் தேசிய இனத்தின் ஒட்டுமொத்த இன விடுதலைக் கோரிக்கையான சுயநிர்ணய உரிமை என்பதைப் பலவீனப் படுத்துவதாகவும் அமைந்து கொள்கிறது. அண்மைக் காலங்களில் வடமராச்சியின் சில பகுதிகளில் வேலணை, வட்டுக் கோட்டை, கோப்பாய் போன்ற பகுதிகளில் இடம் பெற்ற சாதிய மோதல்கள் இவற்றை வெளிப் படுத்துகிள்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய ஒடுக்குமுறையின் கோரத்திலிருந்த தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மீண்டும் தம்மை அமைப்புரீதியாக ஆக்கிக் கொள்வது தான் அவர்கள் முன்னுள்ள சரியான மார்க்கமாகும். தமது முன்னையகால அனு பவங்கள் காட்டும் திசையில் வழி நடப்பதற்கு வலுவான அமைப்பு அவசியம். அது நிச்சயம் தீண்டமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் போன்ற நிதானம் மிக்கதும் சமகாலத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதுமான ஒன்றாக அமையவேண்டும். அதை விடுத்து நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை நாடிச் சென்று பாதுகாப்புப்பெறுவது என்பதோ அன்றி வாக்கும் பாராளுமன்றமும் சாடி நிற்கும் புதிய தமிழ்த் தலைமைகளைச் சார்ந்து நின்று மட்டும் விமோசனம் பெற முடியாது. முழுமையாகவே தாழ்த்தப்பட்ட மக்கள் விமோசனத் திற்கான மார்க்கத்தைத் தேடுவதற்கு ஒரு பட்டறிவுக்கு உட்பட்ட பரிசீலனையில் இறங்கி தமக்குரிய வலுவான அமைப்பு ஒன்றினைத் தேடிக் கொள்ள வேண்டும். அத்தகைய அமைப்பு வெறும் சாதிய கருத்தியல் கொண்ட அமைப்பாக அமையக் கூடாது என்பது கவனத்திற்குரியதொன்றாகும். அத்துடன் இனவிடுதலையை நிராகரிக்காத ஆளும் வர்க்க சக்திகளுக்கு துணைபோகாத ஏகப் பெரும் பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய வர்க்கக் கண்ணோட்டத்தில் அமைந்த வெகுஜனத் தன்மையும் அடித்தளமும் கொண்டதோர் அமைப்பின் தோற்றம் இன்று சாதியத்திற்கு எதிராகத் தேவைப்படுகிறது. அத்தகைய அமைப்பின் மூலமே வடக்கில் வலுக்குன்றாதிருக்கும் சாதியத்தை எதிர்த்து நின்று அதனை வீழ்ச்சி பெறச் செய்ய முடியும்.

# மாணவர்களை மட்டம் தட்டும் சிலர்

இன்று மலையக மாணவர்களின் கல்வியில் பெற்றோர் மாணவர் ஆசிரியர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட அனைவருமே அக்கறை காட்டத் தலைப்பட்டுள்ளனர். ஆனால் இவ் நடை முறையில் இருந்து விலகி நின்று மாணவர்களை கல்வியில் நாட்டம் கொள்ள விடாது தடுப்பதிலும் ஒரு சில ஆசிரியர்களும் அதிபர்களும் ஆங்காங்கே இருக்கிறார்கள் என்பதைக் காணமுடிகிறது. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஏன் படிப்பு? உங்கள் கல்வி முயற்சிகளை வெளியே சென்று விரிவாக்கக கூடாது. அப்படி மேலதிகமாக ஏதாவது படிக்க முற்பட்டால் வகுப்புக்கு வரக்கூடாது. மன்னிப்புக் கடிதம் தரவேண்டும். அதற்கும் மேலால் தண்டனைகள். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள் வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாயின் பெரும் பிரச்சாரமே நடாத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் மலையகத்தைச் சார்ந்தவர்களாகவும் பெரிய கங்காணி கணக்கப்பிள்ளை குடும்பங்களில் இருந்து வந்தவர்களாக இருப்பதால் அதிகம் அதுபற்றி வெளியில் தெரிவதில்லை. அப்பன் பாட்டன் எப்படி தொழிலாளர்களை நடத்தினார்களோ அதே போன்று அதிபர், ஆசிரியர்களாகியுள்ள அவர்களது பிள்ளைமாரும் மாணவர்களை நடாத்த முற்படுகின்றனர். இதற்கு உதாரணமாக பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள ஒரு தமிழ் பாடசாலையை எடுத்துக் காட்டலாம். தோட்டத் தொழிலாளர்களுக்கு வெளியில் இருந்து மட்டுமல்ல உள்ளிருந்தும் குழிபறிப்பவர்கள், உறிஞ்சுபவர்கள் இருக்கிறார்கள். கல்வித்துறையிலும் வஞ்சகர்களும் வல்லூறுகளும் இருந்து வருகிறார்கள் என்பதை மாணவர், பெற்றோர், ஆசிரியர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் மலையக மாணவர்களின் கல்வித் தாகத்தைத் தடைசெய்ய சில சுயநலமிகளான ஆசிரியர், அதிபர்கள் முயலும் அதேவேளை சமூக அக்கறையும் தொழிலாளர்களின் பிள்ளைகளை அக்கறையோடு கைதூக்கிவிடும் ஆசிரியர், அதிபர்களையும் அவர்களது அயராத முயற்சிகளையும் பாராட்ட வேண்டும்.

மலையக மாணவன்
நோர்வட்

# ஒரு இடதுசாரி அறிஞரின் மறைவு

1981 முதல் 1984 வரை 'சற்றடே ரிவிவ்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்து தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் பற்றி வெளியுலகிற்கு கொண்டு வந்த துணிச்சல் மிக்க பத்திரிகை யாளரான காமினி நவரட்ண மறைந்து விட்டார். 1980 களில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையும், அடக்குமுறைகளையும் பற்றி மிகவும் ஆபத்தான சூழ்நிலை யிலும் 'சட்டர்டே ரிவிவ்' ஆங்கில பத்திரிகையினூடாக வெளிக் கொண்டு வந்தவர் காமினி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த அப்பத்திகையின் ஆசிரியராக இருந்த காலகட்டத்தில் இராணுவத்தினரதும் ஒரு சில தீவிரவாதிகளினதும் எதிர்ப்புக



ளுக்கு முகம் கொடுக்க அவர் தயங்கவில்லை. மேற்படி இருதரப்பினராலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட போதும் அவர் அவரினது நிலைப்பாட்டை

—— தொடர்ச்சி 11ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# இவர் உலக இரட்சகர்

இன்றைய உலகின் ஜனநாயகம் மனித உரிமை சுதந்திரம் என்பனவற்றைப் பாது காக்கும் புனிதக் கடமையை கையில் வைத்திருப்பதாகக் கூறிக் கொள்ளும் அமெரிக் காவின் ஜனாதி பதி தான் பில் கிளிங்டன். உலகத்தை சொஷலிசம் கம்யூனிசத்தில் இருந்து காப்பற்று வதற்காகவும், முதலாளித்து வத்தை, ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்து வதற்காகவும் அமெரிக் காவிற்கு தலைமை தாங்குவதில் தற்போது பதவி



தடவையாக இருப்பவர் பில் கிளிங்டன் இளமையானவர் புனிதமானவர் கறைபடியாத கரங்களை உடையவர் அநீதிகளைப் பொறுத்தக் கொள்ள மாட்டாதவர் என்றெல்லாம் புகழாரம் பெற்றவர் இந்த கிளிங்டன். உலகில் அழிவுதரும் எத்தனை ஆயுதங்களையும் தானே கண்டுபிடித்து உற்பத்தி செய்து உலகம் பூராவும் விற்று வியாபாரம் நடாத்தி யுத்தங்களை மூட்டி நடாத்திவரும் அமெரிக்கா ஈராக்கில் அழிவு தரும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க முன் நிற்கிறது. ஐ. நா. என்ற பெயரில் அமெரிக்கா ஈராக் மீது தொடுத்துள்ள மனிதநேயமற்ற தடைகளுடன் இன்று அந் நாட்டின்மேல் போர் தொடுக்கவும் ஆயத்தம் செய்து நிற்கிறது. அதற்குத் தலைமை தாங்கும் கிளிங்டன் தனது பரிவாரங்களை பல நாடு ஆதரவு தேடுகிறார். உலகத்தை அழிவு தரும் ஆயு தங்களில் இருந்து பாதுகாக்கும் உலக இரட்சகர்போல் வேடமிட்டு நிற்கும் கிளிங்டன், இன்று பாலியல் பிரச்சினையில் சிக்குண்டு தவிக்கும் நிலைக்கு உள்ளாகி உள்ளார். இவரது நீண்டகால பாலியற் குற்றங்கள் இன்று அம்பலத்திற்கு வந்து நீதி மன்றத்தை சென்றடைந்திருக்கிறது. தனது பதவியை பாவித்து தனக்குக் கீழ் வேலை செய்த இளம் பெண்கள் மீது பாலியல் சேட்டைகள் சித்திரவதைகள், வல்லுறவுகள் நடாத்தி வந்த அசிங்கச் செயல்கள் இன்று அம்ப லத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அவரது பாலியல் சேட்டைகளையும் வல்லுறவுச் செயல்களையும் அவரது மனைவியும் அமெரிக்காவின் முதல் பெண்மணியுமான கிலாரி கிளிங்டன் மட்டுமே மறுத்துரைத்து கணவனைக் காப்பாற்ற முனைந்துள்ளார். இத்தகைய பாலியல் ஊழலில் இருந்து தப்புவதற்காக ஈராக் மீதான ஒரு தாக்குதலுக்கு இந்த பாலியல் மன்னன் அவசரப்பட்டுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் அதற்கு உலகில் கடும் எதிர்ப்பு தோன்றியிருக்கின்றது. அதேபோல் சாதாரண அமெரிக்க மக்கள் கிளிங்டன் மீது கடும் கோபத்தைக் கொண்டுள்ளனர்.

இத்தாலியில் இருந்து வெளிவரும் 'பனோராமா' என்னும் சஞ்சிகை பெண்ணின் கீழ் பகுதியைச் சிலுவையாக்கி அதில் கிளிங்டன் அறையப்பட்டுள்ளதாகவும் அவர் அமெரிக்க தேசியக்கொடியைக் கோவணமாகக் கட்டி இருப்பதையும் படமாக்கி வெளிமிட்டுள்ளது. அன்று யேசுவை தவறாகச் சிலுவையில் அறைந்தார்கள். இன்று கிளிங்டனைச் சரியாகவே சிலுவையில் அறைந்துள்ளார்கள்.

# அமெரிக்காவின் தப்புக்கணக்கு

சும்மா ஏன் அமெரிக்காவை எதிர்ப்பான்? அமெரிக்காவிற்கு இலங்கையில் என்ன தேவையாய் இருக்கிறது. என்று சிலர் கதைப்பதுண்டு.

அமெரிக்காவை ஒதுக்காமல் அமெரிக்கா வகிக்கும் பங்கை யாதார்த்தபூர்வமாக ஏற்றுக்கொண்டு வாழப்பழகிக்கொள்ள வேண்டும் என்று சிலர் புதி வேதாந்தம் போதிக்கின்றனர். அமெரிக்காவிற்கு இலங்கையில் என்ன தேவையாய் இருக்கிறது என்று கேட்பவர்கள் இலங்கையில் அமெரிக்க பல்தேசிய கம்பனிகளின் எண்ணிக்கை கூடியுள்ளது ஏன்? வொய்ஸ் ஒப் அமெரிக்கா போன்ற வற்றினை அமெரிக்கா நிறுவியிருப்பது ஏன்? மிகவும் பெறுமதியான எப்பாவலை பொஸ்பேற் கணியத்தை அமெரிக்க கம்பெனிக்கு நியாயமற்ற நிபந்தனைகளுடன் விற்கும்படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதேன்?

யுத்தத்திற்கு தேவையான ஆலோனைகளையும் ஆயுதங்களையும் வழங்கிவருவதேன்? தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென்று அமெரிக்காவில் பிரகடனம் செய்தததுமட்டுமன்றி இலங்கையிலும் அதனை தடைசெய்ய வற்புறுத்தி வந்ததேன்? இவையெல்லாம் அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலன்களுக்கு தேவையானவை. இலங்கையும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலிருக்க வேண்டும் என்பது அதனது விருப்பம்.

எமது நாட்டு வளங்களை பல்தேசிய கம்பெனிகளுக்கூடாக ஈவிரக்கமின்றி சுரண்டுவதையும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எதிரான சூழ்நிலைகளை உருவாக்கி வருவதையும் யதார்த்தம் என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? இவ்வாறான திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுவருவது மட்டுமன்றி இலங்கையில் அமெரிக்கா மேற்கோள்ளும் நடவடிக்கைகளுக்கு இலங்கை மக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பில்லை என்று தென்கிழக்காசியா விவகாரங்களுக்கு பொறுப்பான திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளதாக அறியமுடிகிறது.

இத்துடன் அமெரிக்க தலைமீடுகளை இலங்கையிலுள்ள மாக்சிஸ்டடு லெனினஸ்ட்டுகள் தான் (கம்யூனிஸ்கள்) எதிர்க்கிறர்கள் அவர்களை இலகுவாக அடக்கி விடலாம் என்றும் அத்திணைக்களம் கருத்து தெரிவித்துள்ளது. இது அமெரிக்காவின் தப்புக் கணக்காகவே இருக்கும். ஏனெனில் தமிழ்மக்கள் அவர்களது சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா விற்காக விட்டுக்கொடுக்கபோவ தில்லை. இம்மக்கள் அவர்களது தேசிய அபிலாசைகளை விட்டுக் கொடுக்கப்போவதில்லை. முஸ்லீம்கள் அமெரிக்க சாத்தானை அனுமதிக்க போவதில்லை. இந்நாட்டு தொழிலாளர்களும் விவசாயிகளும் அமெரிக்காவுக்கு விலைபோக மாட்டார்கள். இலங்கையில் உண்மையான மாக்கிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் (கம்யூனிஸ்ட்டுகள்) எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அவர்கள் அமெரிக்காவிற்கு இணங்கிப் போகமாட்டார்கள். அவர்கள் இலங்கை மக்களின் இதயம், ஆத்மா அவர்களின் பலம் மக்களின் பலம்.

## ஒரு இடதுசாரி தொடர்ச்சி

விட்டுக் கொடுக்கவில்லை. பேரினவாதத்தின் சவாலை ஏற்றுக் கொண்டு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுக்கும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களில் இவர் மிகவும் குறிப்பிடக்கூடியவர்.

லண்டனில் படித்து பொருளியல் பட்டம் பெற்ற இவர் இடது சாரி அரசியல் வழியில் வாழ்ந்தவர். இவர் ஒரு துணிச்சலான நேர்மையான பத்திரிகையாளர் மட்டுமன்றி இவர் ஒரு இடது சாரி நோக்குடைய அறிஞராகவும் திகழ்ந்தார்.

தமிழ் மக்களின் உரிமைக்காக மட்டுமன்றி நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் இவர் போராடியுள்ளார். அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்காக ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்ட மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு எதிராக பல மட்டங்களிலும் காமினி நவரட்ண வேலை செய்தார். என்பது குறிப்பிடத்தக்கதாகும். தனது வன்மையான எழுத்தின் மூலம் பத்திரிகை சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடி வந்தவர்.

கடந்த 11-03-98ல் காமினி நவரட்ண மரணமடைந்து விட்டார். அவர் விட்டுச் சென்ற இடம் சிறிது காலத்திற்கு வெற்றிடமாகவே இருக்கப் போகிறது. ஏனெனில் காமினி போன்ற இடதுசாரி நோக்கும் சகலவித அடக்குமுறைகளையும் நேர்மையாகவும் துணிச்சலுடனும் தனது பேனாவின் வலிமை கொண்டு எழுதக் கூடிய பத்திரிகையாளர் இன்றைய சூழலையும் மீறித் தோன்றச் சிறிது காலம் எடுக்கவே செய்யும். மறைந்த காமினி நவரட்ணவிற்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

## அமெரிக்க தொடர்ச்சி

பொருளாதாரக் கொள்கையும் தனியார் மயமும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஆணையிட்டு வழிகாட்ட அரசாங்கம் மிகப் பணிவுடன் செயல்பட்டு வருகின்றது. அமெரிக்க ஆதிக்கத்திற்கான வேலைகளில் தாமதம் அல்லது தயக்கம் காட்டப்படும் வேளைகளில் அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து நேரடியாக விளக்கம் கோரப்படும் அளிவிற்கு நிலமை சென்று கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் தன்னை இடதுசாரியாகக் காட்டி வந்த ஜனாதிபதி தனக்கும் அதற்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை எனக் கூறியுள்ளமை கவனத்திற்குரியதாகும். கூடவே உள்ள பாராளுமன்ற இடதுசாரிகள் இது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அமெரிக்கா வந்தால் என்ன? அவன் அப்பன் வந்தால்தான் என்ன? நமக்கு பதவிக் கதிரைகள் இருந்தால் போதும் என்ற நிலையில இருந்து வருகிறார்கள்.

பொருளாதாரத்துறையில் புகுந்து கொண்ட அமெரிக்கா இன்று அரசியல் இராணுவ விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. அரசாங்கத்தின் அரசியல் தீர்வு என்பது பின்னுக்குத் தள்ளப்படவும் யுத்தம் முனைப்புடன் முன் தள்ளப்படவும் அமெரிக்காவே திரை மறைவில் இருந்து செயல் பட்டு வருகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட கலாச்சாரம் என்று பௌத்த பேரினவாதிகள் முழக்கமிட்டு அதனை ஏனைய தேசிய இனங்களுக்கு எதிராகத் திருப்பி வருகிறார்கள். ஆனால் அவர்களது கண் முன்னாலேயே அந்நிய கலாச்சாரத்தால் அமெரிக்க தகவல் ஊடகங்களால் நாட்டின் சகல கலாச்சாரங்களும் பண்பாடுகளும் அழிக்கப்பட்டு வருவதையிட்டு ஒரு வார்த்தை பேசத் தயார் இல்லாத நிலைதான். காரணம் அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிராக விரல் காட்ட முடியாத கையிறு நிலையில் அவர்கள் இருந்து வருவதுதான்.

எனவே சகல வழிகளாலும் துறைகளாலும் அமெரிக்க ஆதிக்கத்திற்குள் நாடு வீழ்த்தப்பட்டு வருகின்ற அபாயத்தை தடுத்த நிறுத்த மக்கள் முன்வரல் வேண்டும். நேர்மையான இடது சாரி சக்திகள் மட்டுமே இவ்விடயத்தில் தெளிவாகவும் சரியாகவும் நின்று வருகிறார்கள். அவர்கள் பக்கத்தில் அணிதிரண்டு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் முன்செல்ல வேண்டிய தேவை உருவாகி உள்ளது. மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

## கிழக்கு மக்களின் தொடர்ச்சி

கடந்து வந்த ஒவ்வொரு ஆண்டினையும் எடுத்து நொக்கும் போது வடக்கை விட கிழக்கிலேயே யுத்தக்கொடுமைகள் தலைவிரித்தாடி வந்துள்ளன எனலாம். வடக்கில் அதுவும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் எதுவும் தென் இலங்கையிலோ அன்றி வெளிஉலகிலோ எதிரொலிப்பது போல் கிழக்கில் இடம்பெறுபவை முக்கியத்துவம் பெறுவதில்லை என்பது உண்மையே. அவற்று க்கான காரணம் காரியங்கள் பல உண்டு. அவை வேறொரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூறக் கூடியனவாகும்.

இன்றைய யுத்தத்தில் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் முஸ்லீம் மக்கள் அனுபவித்த வரும் யுத்தக்கொடூரங்கள் விபரிக்க இயலாத அளவுக்கு பெருகி நிற்கின்றன. ராணுவத் தாக்குதல்கள், பழிக்குப்பழி எடுக்கும் கொலைகள், கிராமங்கள் தாக்கி எரியூட்டி அழிக்கப்படுதல், பாலியல் வல்லுறவுகளுக்கும் கொலைகளும் வெளியில் வந்தவற்றைவிட அடக்கப்பட்டவைகளே ஏராளம். பொருளாதார அழிவுகள், இடம் பெயர்வுகள், கல்வி சுகாதாரச் சீர்கேடுகள், அரசஅதிகாரிகள், அரசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் திட்டமிட்ட ஏமாற்றுகள் போன்ற பல்வேறு அம்சங்களாலும் கிழக்கின் மக்கள் திரும்பிய பக்கமெல்லம் அவலங்களையும் இழப்புக்களையுமு் கொடுமைகளையும் எதிர் கொள்ளும் மக்களாகவே காணப்படுகின்றனர். விரத்தியும் வெறுப்பும் மட்டுமன்றி வைராக்கியம் ஏற்படும் மக்களாகவே கிழக்கு மக்களைக் காணமுடிகிறது.

ஆதலினால் கிழக்குமக்களுக்கு சமாதானம் அவசியப்படுகிறது. அது அடித்துத் தீத்திக்கொள்ளும் சமாதானமாக அமையக்கூடாது. பிச்சைபோடும் அரசியல் தீர்வாக அன்றி கௌரவமானதுமான நியாயமான ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வாக அமையவேண்டும் என்பதையே எச் சூழலிலும் கிழக்கு மக்கள் வேண்டுகிறார்கள். அந்த நிலை எப்போது வரும் என்ற ஏக்கத்தைக்கொண்ட எதிர்பார்ப்புடனேயே இன்று கிழக்கிலங்கை மக்கள் இருந்து வருகிறார்கள்.

## ஐக்கிய தேசியகக் தொடர்ச்சி

பலப்படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அண்மையில் நடந்து முடிந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஐ. தே. கட்சியின் தொழிற்சங்கமும் ஈடுபட்டிருந்தபோதும் 105 ரூபா சம்பளத்தை வற்புறுத்தி எதிர்க் கட்சித் தலைவர் ஒரு வார்த்தை யேனும் பேசவில்லை. மேலும் 105 ரூபாவை பெறமுடியாமல் போனமைக்கான பொறுப்பை ஐ. தே. கட்சியின் தொழிற்சங்கமும் ஏற்க வேண்டும். அத்தொழிற் சங்கத்தின் உதவி செயலாளர்களில் ஒருவரான புத்ரிரசிகாமணி 105 ரூபா கிடைத்தது குறித்து காலம் தாழ்த்து கவலை தெரிவித்தி ருக்கின்ற போதும் ஐ. தே. கட்சியின் தொழிற்சங்கம் கவலை தெரிவிக்கவில்லை. 101 ரூபாவை பெறுவதற்கான பேச்சு வார்த்தைகளில் அச்சங்கமும் கலந்து கொண்டு அம்முடிவை ஏற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் பற்றியும் மலையக மக்கள் பற்றியும் ஐ. தே. கட்சி தற்போது கரிசனை காட்டுவதற்கு நோக்கமில்லாமல் இல்லை. அரசாங்கத்தின் மீது விரக்தியடைந்துள்ள தமிழ் மலையக மக்களை கவரும் விதத்தில் பேசுவது மட்டுமன்றி எதிர்வரும் மாகாணசபையில் தமிழ் மலையக மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தமிழ், மலையக அபேட்சகர்களை அதிகமாக ஐ. தே. கட்சி பட்டியலில் சேர்க்கவும் மேற்கொண்டு வருகிறது. மாகாணசபை தேர்தலில் மலையகத்தில் ஐ. தே. கட்சி பட்டியலில் போட்டியிடும் தமிழ் அபேட்சகர்களின் பெயர்கள் பற்றி முடிவு செய்யப்பட்டு விட்டதாக அறிய முடிகிறது.

இவை யாவும் அடுத்த மாகாண சபை தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெறுவதற்காக ஐ. தே. கட்சி செய்யும் மாய் மாலங்கள். பொதுஜன ஐக்கிய முன்னணி பின்பற்றுவதற்காக மாற்று வழிகளை தேடாது மீண்டும் ஐ. தே. கட்சியின் சாத்தான் வேதங்களுக்கு செவிமடுக்கவோ அவற்றுக்கு பலியாகவோ மாட்டார்கள் என்பதை மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYAPOOMI புதியபூமி
சுற்று05 ஏப்ரல்1998 பக்கம்12 விலை ரூபா10/= சுழற்சி18

# மலையக மக்களின் சுகாதாரம்

தோட்டப்புற சுகாதாரசேவையை தேசிய சுகாதார சேவையுடன் இணைக்கும் நடவடிக்கையாக தோட்டப்புற வைத்தியசாலைகள் (மருந்தகங்கள்) அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. அரசாங்கம் தோட்டங்களை பொறுப்பேற்றவுடன் இடம் பெற்ற சம்பவங்களும் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் இன்னும் மலையக மக்கள் மனதில் ஆறாத வடுக்களாக இருக்கின்றன. மீண்டும் நிகழாமல் இருக்க வேண்டியது முதலாவது நிபந்தனையாக இருக்கவேண்டும்.

குறிப்பாக சொல்லப்போனால் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கட்டிடங்களில் மட்டும் தோட்ட வைத்தியசாலைகள் இருக்காமல் வைத்தியர்கள், தாதிகள், மருந்தாளர் கள், மருந்துகள்,வார்ட்டுகள் அம்புலனஸ்கள் உட்பட பலவிதமான சுகாதார வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

தோட்ட வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்வதாகக் கூறிக் கொண்டு தற்போது கடமை யாற்றும் தோட்டவைத்திய அலுவலர்களையும், தோட்ட உதவி வைத்தியர்களையும், மருத்துவர்களையும் தகுதி போதாது என்ற சாட்டில் பதவிநீக்கம் செய்யமல் இருப்பது மிகவும் முக்கியமாகும். தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை, சூழல் என்பவற்றுடன் நீண்ட காலமாக தொடர்புகொண்டுள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் தொட்டத்தொழிலாளர்களின் மொழியை தெரிந்தவர்கள் என்ற ரீதியிலும் அவர்கள் தொடர்ந்து வேலையில் இருப்பது அவசியம்.

அவர்களின் தகுதியை உயர்த்த தேவையான பாடவிதான பயிற்சி யையும் பயிற்சிநெறிகளையும் வழங்கவேண்டும். புதிதாக வைத்தியர்கள் தாதிகள், மருந்தாளர்கள் வைத்தியசாலை ஊழியர்கள் நியமிக்கும்போது தோட்டப்புறங்களிலுள்ளவர்களுக்கு குறிப்பாக மலையக சமூகத்தவாகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

தற்போது சில தோட்டபுற வைத்திய சாலைகளுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் தொடர்ந்தும் கிடைக்க வழிசெய்யப்படவேண்டும்.

இவ்வாறான ஆகக்குறைந்த நிபந்தனைகளுடன் தோட்டப்புற சுகாதாரசேவை தேசிய சுகாதாரசேவையின் மட்டத்துக்கு உயர்த்தப்பட வேண்டும். தோட்டப்புறங்களில் நிலவும் போஷாக்கின்மை, இரத்தசோகை சிசுமரணம், பிள்ளைப்பேற்றின்போது தாய்மாரின் மரணம் என்பவற்றுக்கு எதிராக திட்டமிட்ட துரிதநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுகாதாரசேவையுடன் நெருங்கின தொடர்புடைய பிறப்பு, இறப்பு பதிவுகளையும் தோட்டவைத்திய சாலைகளிலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். பிறப்பு, இறப்பு பதிவாளர்களாக மலையத்தவர்களை நியமிக்க வேண்டும்.

## ஐம்பது ஆண்டுகள்

——தொடர்ச்சி

மண்ணின் வளங்களையும் மக்களின் உழைப்பையும் வரையறையின்றச் சுரண்டிச் செல்வதற்கு சுதந்திரம் கிடைத்துள்ளது.

வடக்கு கிழக்கில் மக்களுக்கும் சமாதானத்தை அனுபவிக்கச் சுதந்திரமில்லை. போரின் எசமான்கட்கும் ஆயுத விற்பனையாளர்கட்கும் தடையின்றிக் கொலைக் கருவிகளை விநியோகிக்கும் சுதந்திரம் இருக்கிறது இந்த நாட்டைத் தாம் நினைத்தபடி ஆட்டிவைக்க உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றுக்கும் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. ஆனால் தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏனைய உழைக்கம் மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்ததா? மக்கள் வெல்லத்தொடங்கி இழந்து போன சுதந்திரத்தை இனித்தான் வெல்ல வேண்டும். இன்றைய எசமானர்கள் முன்னைய கொலனிய எசமானர்கள் போல எளிதாக அடையாளங்காண முடிவோர் அல்லர். எனவே இவர்களது ஆதிக்கத்நின்று சுதந்திரம் அடைவதும் சிக்கலான ஒன்றுதான். ஆயினும் 1994ல் மக்கள் பெற்ற வெற்றி விடுதலைக்கான புதிய நம்பிக்கைகளை விளைவித்துள்ளது. மக்கள் மீது நம்பிக்கை வைத்து நேர்மையான இடதுசாரி முற்போக்குச் சக்திகள் ஒன்றுபட்டு செயற்பட முடியுமாயின் புதிய வெற்றிகளும் பூரண விடுதலையும் இயலுமானவை. இதனைச் சாத்தியப்படுத்த நாட்டை அழிக்கும் யுத்தம் நிபந்தனையின்றி நிறுத்தப்படவேண்டும். தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நிலையான நியாயமான தீர்வு காணப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கமும் ஜனநாயகமுமே மக்களை ஒருமைப்படுத்தி ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வெற்றிகட்கும் உண்மையான சுதந்திரத்திற்கும் வழி சமைக்கும்.

ஐம்பது ஆண்டுகளின் பின்பும் நாட்டின் சுதந்திரம் உழைக்கும் மக்களை எட்டவில்லை கடந்த காலத்தவறுகளை உடனேயே திருத்தி சரியான நடவடிக்கைகளை எடுக்க இடதுசாரி முற்போக்குச் சக்திகள் ஒன்றுபடத் தவறினால் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் பின்பும் இந்த அவலந்தான் இருக்கும்.

**தேசபக்தன்**

# இந்துத்துவ ஆட்சி கைகளை நீட்டுமா!

இந்துத்தத்துவத்தை அடிப்படையாக ஏற்றுக் கொண்ட பாரதீய ஜனதா கட்சியும், அதனுடைய நிச்சயமற்ற கொள்கை அடிப்படை இல்லாத கூட்டாளிகளும் சேர்ந்து இந்தியாவில் ஆட்சியமைத்துள்ளனர். ஆட்சியமைக்கும் நோக்கத்தில் இந்து தத்துவ நிலைப்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதாகக் காட்டும் கொள்ளைப் பிரகடனத்தை பாரதீய ஜனதா கட்சி வெளியிட்டுள்ளது.



அதனுடைய கொள்ளைப் பிரகடனத்தைப் பார்த்தால் ஓரளவு முற்போக்கான அம்சங்கள் போன்று இருப்பதைக் காணலாம். இருந்தும் இன்னும் பாரதீய ஜனதா கட்சி இந்தியாவில் எப்படி ஆட்சியை நடத்தப் போகிறது என்று திட்டவட்டமாக கூறமுடியாதிருக்கிறது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழர் பிரச்சனையில் தனது நிலைப்பாட்டை இந்தியாவின் புதிய அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறது. அதற்காக இந்தியப் பிரதமர் வாஜ்பாயை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் சந்தித்தார். புதிய இந்தியப் பிரதமரை சந்தித்த முதலாவது வெளிநாட்டவர் என்ற பெருமையையும் வெளிப்படுத்திக் கொண்டார்.

அதாவது தமிழ் மக்களின் பிரதேசங்களில் யுத்தத்தை தொடர்ந்து நடத்தவும், தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கவும் இந்தியா முட்டுக் கட்டையாக இருக்கக் கூடாது என்பதிலேயே இலங்கை அரசாங்கத்தின் அக்கறையாகும். என்பதனை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் டெல்லியிலிருந்து தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அதே நாட்களில் இலங்கையின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தை பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்திற்கு சென்று இலங்கையில் தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுக்க வேண்டிய இராணுவ உதவிகளை செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

பாகிஸ்தானிலிருந்து பெறப்பட்ட இராணுவ உதவிகள் எந்த வகையிலும் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பயன்னடுத்தக்கூடியனவல்ல. யுத்தத்தை விஸ்தரிக்கவே உதவக்கூடியதாகும்.

வெளிவிக்கார அமைச்சர் இந்தியப் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோள்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு சூழ்நிலைகளை ஏற்படுத்தாது.

இது இவ்வாறிருக்க இங்கு நடைபெறும் கைதுகள் தொடங்கி தமிழ் மக்களுக்கு எதிராக எல்லா நடவடிக்கைகள் பற்றியும் இலங்கையிலிருந்து இந்து அமைப்புக்களும், இந்து பிரமுகர்களும் பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் இந்து ராய்ஜம் அமைந்து விட்டதாக எண்ணி மனுநீதிகண்ட சோழனின் தீர்ப்பை இலங்கைப் பிரச்சினையிலும் வாஜ்பாயிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். கடந்த காலங்களில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் மாநாடுகளில் கலந்து சிறப்பித்த தலைவர் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தில் இருப்பதால் இலங்கை தமிழ் மக்களுக்கு ஆதரவாக புதிய இந்திய அரசாங்கம் செயற்படும் என்று சிலர் கனவு காண்கிறார்கள்.



இந்திய தேசிய அகங்காரத்தை உயர்த்திப் பிடிக்கும் நோக்கம் கொண்ட பாரதீய ஜனதா கட்சி இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதன் அர்த்தம் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு கிடைத்துவிடும் என்பதல்ல. பாரதீய ஜனதா கட்சியின் இந்திய தேசிய வாதத்திற்கு எதிராக இல்லாத வரை இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியாவிலிருந்து எவ்வித தொந்தரவும் ஏற்படாது. ஜோர் பெர்னான்ட்ஸ் பாதுகாப்பு அமைச்சராகி விட்டாலும் கூட இந்தியாவின் பிராந்திய நலனிருந்துதான் எல்லா அசைவுகளிலும் தீர்மானிக்கப்படும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கை தமிழ் மக்கள் விடயத்தில் புதிய இந்திய அரசாங்கத்தின் தலையீடு வருமானால் அத்தயீடு இந்திய தேசியவாத, மேலாதிக்க நிலைப் பாட்டிலானதாகவே இருக்கும். எனவே தமிழ் மக்களின் அவலங்கள் பற்றி எவ்வளவுதான் கூச்சல் போட்டாலும் வாஜ்பாய்க்கு கேட்க வேண்டிய நேரத்தில் தான் கேட்கும். அதன் பிரதிபலிப்பு அவரின் நலனிலிருந்தே வெளிப்படும்.

இந்திய தேசியவாதம் இந்தியாவிலுள்ள எல்லா தேசிய இனங்களையும் எவ்வாறு சமமாக மதிக்க முடியும் என்பது கேள்விக்குறியே. அவ்வாறான நிலைப்பாடு உள்ள நிலைப்பாட்டை கொண்டுள்ள இந்திய அரசாங்கம் மனப்பூர்வமாக இன்னொரு நாட்டின் தேசிய இனத்தின் உரிமைகளை எவ்வாறு மனப்பூர்வமாக கருத்திற் கொள்ளும். அதேவேளை இலங்கை தமிழ் மக்களுக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வரும் சில தலைவர்களின் இலங்கை தமிழ் மக்களுக்கான தமிழ் நாட்டு மக்களின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

# சலுகைகளுக்கு குனிந்து நிற்போர் உரிமைகளுக்கு நிமிர்ந்து நிற்க மறுப்பு

தலைநகர் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்டு வரும் ஆயுதப் படைகளின் நடவடிக்கைகள் உச்சத்திற்குச் சென்றுள்ளது. முற்றிலும் இன வன்மத்துடன் ஜனநாயக மனித உரிமை சட்டகங்களுக்கு அப்பால் கேட்பார் இன்றி ஆயுதப் படைகளின் இயல்புகளுக்கு ஏற்றவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த இரண்டு மூன்று வாரங்களாக இரவு பகல் பாராது தமிழர்கள் அனைவரும் விசாரணை என்னும் பெயரில் உள உடல் ரீதியான வதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் .தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் கர்ப்பிணிப் பெண்களும் நோயாளர்கள் வயது முதிர்ந்தோர் சிறுவர்கள் போன்றவர்கள் கூட அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பெயரால் அவஸ்தைகளும் அவமானங்களும் இழைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் தலைநகர் நடவடிக்கைகளை இது வரை தடுத்து நிறுத்த எவரும் முன்வரவில்லை. அதற்குப் பதிலாக ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளுக்கு மேன் மேலும் வசதி செய்து கொடுக்கும் விதிகளும் பிரமாணங்களும் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றையிட்டு பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் எந்தவொரு கட்சியும் உருப்படியான நடவடிக்கையில் இறங்கியதாகத் தெரியவில்லை. வெறும் பத்திரிகை அறிக்கையும் பாக்ஸ் செய்தியும் மட்டும் இக் கொடூர நடவடிக்கைகளை நிறுத்த மாட்டாது என்பதை இந்த பா. உ. க்கள் தெரிந்திருந்தும் அதற்கு அப்பால் செல்ல திராணி அற்று நிற்கிறார்கள். ஒரே நிலைபாடாகப் பாராளுமன்றம் செல்வதை சில நாட்கள் பகிஷ்கரிக்கும் துணிவோ முக்கிய வாக்கெடுப்புகளில் கலந்து கொள்ளாது நிராகரிக்கும் முடிவோ எடுக்க முடியாது உள்ள நிலைமைதான் பரிதாபகரமானது. வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம், தென்னிலங்கை என்ற வேறுபாடு இன்றி அனைத்துத் தமிழரும் 'தமிழர்' என்பதற்காகவே மந்தைகள் போல் விரட்டி லொறிகள் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டு துப்பாக்கி முனையில் விசாரித்து வதைக்கப் படுகிறார்கள். ஆனால் அவர்களின் பிரிநிதிகள் என்போர் தனிச் செல்வாக்கில் தமக்குரியவர்களை விடுவித்துக் கொள்வதில் அமைதி கொள்கின்றனர். சலுகைகளுக்காகவும் சுய தேவைகளுக்காகவும் குனிந்து வளைந்து நிற்கும் தமிழர் பிரதிநிதிகள் என்போர் தமிழர் படும் அவலங்கள் வேதனைகளுக்காக நிமிர்ந்து நின்று உறுதியாகச் செய்யக் கூடிய ஆகக் குறைந்தளவானவற்றையாவது செய்ய முடியாத நிலையில் இருந்து வருவதுதான் ஆற்றாமையும், அவமானமும் கொண்டதாகக் காணப்படுகிறது. இம் மாதம் அவசரகாலச் சட்டம் நீடிப்பதற்கான விவாதத்தில் சில தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சம்பவங்களையும் புள்ளி விபரங்களையும் முன் வைத்துப் பேசுவார்கள் என்பது உண்மை. ஆனால் அவசரகாலச் சட்டத்திற்கு இருபதுக்கு மேற்பட்ட தமிழ் பா. உ. க்கள் கட்டாயம் கை தூக்கி ஆதரவு தெரிவிப்பார்கள் என்பதும் உண்மையானதாகும். இதுதான் யதார்த்த நிலை என்றால் பேரினவாத மிடுக்குடன் ஆயுதப்படைகள் தமிழர்களுக்கு எதிராக தமது நடவடிக்கைகளை எப்படிக் குறைத்துக் கொள்வர் என எதிர்பார்க்க முடியும்.

வடக்கு கிழக்கு மலையகத்தில் மட்டுமன்றி தமிழர் வாழும் அனைத்து இடங்களிலும் பேரினவாத ஒடுக்குமுறை பல்வேறு வடிவங்களில் குறிப்பாக ஆயுதப்படைகளின் ஊடாகத்தான் முனைப்புடன் செயல்பட்டு நிற்கிறது. இதற்கு தமிழ் பா. உ. க்களை நம்பியோ தமிழர் அமைப்புக்கள் நிமிர்ந்து நின்று செயல் படுவார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது. ஒழுங்கு முறைகளை எதிர்க்கும் பரந்த வெகுஜன இயக்கங்களில் மக்கள் ஒன்றிணைந்து உறுதியான செயல் பாடுகளுக்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ள முன்வரல் வேண்டும்.

---

தேசியவாத அரசியல் அணுகுமுறை அதை நாட்டின் முற்போக்குசக்திகளிடமிருந்து வெகுதூரம் விலக்கி வைக்க உதவியது எனவும் பின்பு கவனிப்போம்.

---

நண்டெழுத்து தொடர்ச்சி ——

சிங்களம் படிப்பது தவறு என்ற கருத்தும் தமிழரசுக் கட்சியால் வலியுறுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தின் பாடசாலைகளில் தமிழ் மக்கள் தாமகவே விரும்பிக் கற்று வந்த சிங்களப் பாடங்கள் நிறுத்தப்பட்டன. சுதந்திரன் ஏட்டில் நண்டெழுத்து வேண்டாம் நமக்கு என்பதை இறுதி வரியாக வைத்து இயற்றப்பட்ட வெண்பாப் போட்டி ஒன்று நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக்கட்சியின் தமிழ்ப்பேசும் மக்கள் என்ற அரசியற் கோட்பாடு, அதன் அரசியல் நடைமுறை காரணமாக, எவ்வாறு வெகுவிரைவிலேயே வடக்கு – கிழக்கின் தமிழரது அரசியற் கோஷமாக முடங்கி விட்டதுஎன்பதை நாம் அடுத்து வரும் பகுதிகளில் காண்போம். அது போலவே, அதன் சமஷ்டிக் கொள்கை எவ்வாறு அதன் அரசியல் வெறுமையை அம்பலப்படுத்தியது எனவும் அதன் குறுகிய

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு லக்ஸ் கிராபிக் (பிரை) லிமிட், 98, விவேகானந்த மேடு கொழும்பு 13.